பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | மார்ச் 10, 1951 | இதழ் 2

திருவள்ளுவர் ஆண்டு 1982 மாசித்திங்கள் 26-ம் நாள்

பாதுகாப்பு	... கோபாலரெட்டி	...	5
எதிர்பார்த்த பிழைப்பு	... கார்ட்டூன்	...	6
பாரிஸ் பேச்சு	... தலையங்கம்	...	7
காலமும் கருத்தும்	...	...	11
பொது மேடை	... கடிதங்கள்	...	13
வெறும் கலாட்டா	... கில்லாடி	...	17
காதற் போர்	... பெரி. சிவனடியான்	...	21
அஸ்திவாரமும் மாளிகையும்	... வ. சம்பந்தன்	...	22
எது உண்மை ?	... இராதாமணாளன்	...	31
ஏய் காளி	... எஸ். ஆறுமுகம்	...	35
சர்க்கஸ் ரங்கு	... டி. ஜே. இன்பராஜ்	...	41
பழி	... சுலோசனா	...	44
தமிழ் விருந்து	... தமிழ்த்தும்பி	...	51
அன்பின் ஆழம்	... ரா. வெங்கடசாமி	...	55
இருளும் ஒளியும்	... நாவரசன்	...	61
வளரும் இலக்கியம்	... அரசன்	...	63

பாதுகாப்பு!

ஒரு லட்சிய நாட்டில் மக்கள் நோயும் வறுமையும் இல்லாமல் வாழ வேண்டுமென்றும் பொருள்கள் அதிகம் உற்பத்தியாகிச் செல்வம் சேமிக்கப்பட வேண்டுமென்றும் திருப்தியும் மகிழ்ச்சியும் பாதுகாப்பும் குடிகொண்டிருக்க வேண்டுமென்றும் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். அவர் பாதுகாப்பைக் கடைசியில் குறிப்பிட்டிருக்கிறார். பாதுகாப்பு இல்லையானால் மற்ற வசதிகள் போலியாகிவிடு மென்பது இதன் குறிப்பு. சென்னை சர்க்கார் பயங்கரமான நடவடிக்கைகளின்றியே சட்டத்தையும் அமைதியையும் பாதுகாத்து மக்களிடையே பாதுகாப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றனரென்று கூறிக்கொள்ள முடியும். சமீபகாலத்தில் சுதந்திரம் பெற்ற ஆசியநாடுகளுடன் இந்தியாவை ஒப்பிட்டுப் பார்த்தால்தான் இந்தியா முழுமையிலும் சென்னை ராஜ்யத்திலும் நிலவும் பாதுகாப்பு உணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியும்.

[1951 பிப்ரவரி 26-ம்நாள் சென்னை சட்டசபையில் 1951-52-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது நிதி மந்திரி தோழர் **கோபால ரெட்டி** இவ்வாறு குறிப்பிட்டார்]

செனஸஸ் அதிகாரி:—
என்ன மிஸ்டர், நீங்களா சம்பாதிக்கிறீங்களா,
அல்லது 'சாப்பாட்டுக்கு' யாரையும்
நம்பியிருக்கிறீங்களா?
இந்தியா

பாரிஸ் பேச்சு

ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் அயல் நாட்டிலாகா அதிகாரிகள் சென்ற சில நாட்களாகப் பாரிஸில் கூடிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். இந்நாடுகளின் அயல்நாட்டு அமைச்சர்கள் கூடிப் பேசுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அம்மாநாட்டில் என்னென்ன பொருள் குறித்துப் பேசுவது என்று முன் கூட்டியே தீர்மானிக்கத்தான் அந்நாடுகளின் அயல் நாட்டிலாகா அதிகாரிகள் நால்வரும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்கத்திய பிரதிநிதிகள் ஒரு நிகழ்ச்சி நிரலைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்; ரஷ்யப் பிரதிநிதி மற்றொன்றைச் சமர்ப்பித்திருக்கிறார். மேற்கு நாடுகள் ஆஸ்திரியா தனி நாடாக இயங்க வேண்டுமென்பதில் மிகுந்த அக்கரை காட்டுகின்றன. ரஷ்யா மேற்கு ஜெர்மனியைப் பற்றியே எண்ணமிடுகிறது. இந்நிலையைத்தான் இரு நிகழ்ச்சி நிரல்களும் தெளிவாக விளக்குகின்றன.

எனினும் ஒரு சமரசத் திட்டம் பாரிஸ் பேச்சு வார்த்தையில் உருவாக இடமிருக்கிறதென்றே நம்பலாம். நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதிலேயே முறித்துக் கொள்ள எந்த நாடும் விரும்பாது. அயல் நாட்டு அமைச்சர்கள் பேச்சு வேண்டுமானால் தோல்வியடையலாம்; அப்படிக்கூட நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

உலகச் சூழ்நிலை போர் மூளாமல் தடுப்பதற்கு ஆதரவாகவே இருக்கிறது. இல்லாவிட்டால் எத்தனையோ சந்தர்ப்பங்களில் உலகப் போர் மூண்டிருக்கலாம். சைனா கொரியாவில் தலையிட்டபோதே பெரும்போர் மூண்டிருக்கவேண்டும்; அல்லது சைனாவை 'ஆக்கிரமிப்பாளன்' என்று ஐ. நா. வில் குற்றம் சாட்டிய பின்னரேனும் சண்டை வலுத்திருக்கவேண்டும். இத்தனை சந்தர்ப்பங்கள் கடந்தும், கொரியாவில் 24 மணி நேரத்தில் சுறுசுறுப்புக் காட்டிய அமெரிக்கா இப்போது சாவதானமாக நடந்து கொள்வது பலருக்கு வியப்பைத் தரும் செய்தியேயாகும்.

ஆனால் உண்மை வேறுவிதமாக இருக்கிறது. அமெரிக்கா சீனாவுடன் மோதிக் கொள்ளவோ அல்லது ரஷ்யாவுடன் போர் தொடுக்கவோ தயாராய்த்தான் இருக்கிறது. அணுக்குண்டைப் போட்டுப் 'பகைவர்களை' நொடிப் பொழுதில் அழித்துவிடவும் அது [illegible]த்தான் செய்கிறது. அதன் நேச தேசங்கள் காட்டும் 'ஒத்துழைப்போ' இந்த அவசரத்தையெல்லாம்

17742

பயனற்றதாக்கி விடுகின்றன. எனவே தான் உலகப்போர் தொடங்க அமெரிக்காவுக்குச் சூழ்நிலை இடந்தரவில்லை. கொரியாப் போர் முனையில் அமெரிக்கரைத் தனியே விடுத்துப் பெயரளவில்தான் மற்ற நாடுகள் பங்கு கொண்டிருக்கின்றன. இந்தக் கசப்பான அனுபவம் அமெரிக்கருக்குப் புதிது.

மேலும் பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் அமெரிக்காவின் போக்குக்கு இணங்குவதால் என்னென்ன தொல்லைகள் வருமென்பதைக் கொரியாவில் நன்கு உணர்ந்து கொண்டன. மக் ஆர்தர் சிறு சங்கடங்களைப் பெரும் ஆபத்துகளாக மாற்றுவதில் எவ்வளவு வல்லுநர் என்பதையும் அவை புரிந்துகொண்டன. எனவே தான் போரைப் பரவச் செய்வதற்கு அமெரிக்காவுக்குக் கை கொடுக்க அவை விரும்பாது ஒதுங்கி நிற்கின்றன.

இந் நிலைதான் சமாதானம் குலையாமலிருப்பதற்கு ஆதரவாக இருக்கிறது. நிற்க

மேற்கு ஜெர்மனியைப் பலப்படுத்த மேற்கு வல்லரசுகள் அண்மையில் பெருந் திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றன. ரஷ்யாவின் ஆதிக்கம் ஐரோப்பாவில் வலுப் பெருமல் தடுக்கவே இந்த முன்னேற்பாடு நடைபெறுகிறது. மேலும் கிழக்கு ஜெர்மனி வலுவுள்ள நாடாக மாறிவிட்டது. அபாயம் மேற்கு ஜெர்மனிக்கு எந்த நேரத்திலும் காத்திருக்கிறது என்ற அச்சத்தின் காரணமாகவே மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கவும், அங்கேயுள்ள தொழிற்சாலைகளைப் பயன்படுத்திக் கொண்டு போர்த் தளவாடங்கள் உற்பத்தி செய்யவும் அமெரிக்காவும் பிரிட்டனும் எண்ணுகின்றன. ரஷ்யாவுக்கு இந்த மாறுதல்கள் 'தலைவலி'யை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அதனுல் தான் நான்கு வல்லரசு மாநாடு நடைபெற வேண்டுமென்றும் ஜெர்மனி பற்றிப் பேச வேண்டுமென்றும் அது முன் மொழிந்தது. மற்ற நாடுகளும் ரஷ்யாவின் கோரிக்கையை ஒப்புக் கொண்டிருக்கின்றன. அச்சந்திப்பு நிறைவேறத்தான் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்ற உலகப் போர் முடிந்தவுடன் நிறைவேறிய பாட்ஸ்டாம் ஒப்பந்தப்படி ஜெர்மனியை நிராயுதபாணியாக்கவும் அந்நாடு மீண்டும் ஆயுதபாணியாகாமல் தடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென ரஷ்யா வற்புறுத்துகிறது. ஹிட்லரை நினைக்கும் போது ரஷ்யா மட்டுமல்ல மற்ற நாடுகளும் இந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென எதிர்பார்க்கத்தான் செய்யும். பிரான்ஸ், தன் எல்லைக் கருகில் இருக்கும் ஜெர்மனி மீண்டும் 'உயிர்' பெறுவதை விரும்பவில்லை. பிரிட்டனும் கடந்த போர் அனுபவங்களை எண்ணிப் பார்த்தால் ஜெர்மனிக்கு 'உயிர்' கொடுக்கத் துணியுமா என்பது சந்தேகமே. அமெரிக்காவோ, வளர்ந்துவரும் ரஷ்ய பலத்திற்குச்சரியான மாற்றுவேண்டுமென்ற

நினைப்பில் ஜெர்மனியோடு தோழமை கொள்ள நினைக்கிறது. ஜப்பானேடும் இத்தகைய உறவு கொள்ள அமெரிக்கா முயற்சிப்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது. இங்நிலையில்தான் ஒரு பரிகாரம் காண 'நால்வர்' சந்திப்பு நடைபெறவிருக்கிறது.

அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்ஸும் ரஷ்யாவுடன் பேசும்போது 'ஒரே முகம்' காட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாகிவிட்டன. பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் அமெரிக்காவை எப்படியும் பின்பற்ற வேண்டிய நிலைமையில் தள்ளப் பட்டுவிட்டன என்றே கூறலாம். ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம். வேண்டா வெறுப்பாகத் தான் அவை அமெரிக்காவின் பல திட்டங்களுக்குத் 'தாளம்' போடுகின்றன. அதனல்தான், அமெரிக்காவின் திட்டங்கள் நிறைவேறுவது தாமதப்படுகிறது.

பாரிஸ் பேச்சு ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நிலவும் பிளவைக் குறைக்குமென்று நம்பலாம். உலகில் அமைதிக்குத்தான் ஆதரவு காட்டப்படுகிறது என்று பாரிஸ் பேச்சு வார்த்தைகள் தெளிவாக விளக்குமெனவே நினைக்கிறேம்.

"என்னங்க, பிளாக் மார்க்கட் வியாபாரத்தில் கொள்ளை லாபம் கிடைக்குதுன்னு சொல்றுங்களே, அதை எங்கே, எப்படி ஆரம்பிக்கிறதுங்க? அதான் உங்களைக் கேட்டாத் தெரியுமேன்னு வந்தேன்."

தமிழ்நாட்டுப் புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன் மணிவிழா

1951 ஏப்ரல் 29

●

கவியரசர் பாரதிதாசன் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா திருச்சியில் 29-4-51-ல் சிறப்புற நடைபெற விருக்கிறது. தலைமை வகிக்கச் சென்னை முதல் அமைச்சர் கனம் திரு. **பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள்** கேட்டுக்கொள்ளப்பட் டிருக்கிறார். விழா நிகழ்ச்சிகளில் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்துதல், பொற்கிழி அளித்தல், கவியரங்கம், பாடல்போட்டி, கவிஞர் நாடகமொன்றை நடித்துக் காட்டல் ஆகிய பலவும் சிறப்புற அமையத் திட்டமிட் டிருக்கிறது. **தமிழ் மக்கள் அனைவரும்** விழாவைச் சிறப்பிக்கத் தாராளமாக நிதியளித்தும், சேர்த்தனுப்பியும் பல்லாற்றானும் வெற்றிகரமாக்கித் தருவார்களாக. நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

●

கி. ஆ. பெ. விசுவநாதம், பொருளாளர்,

பாரதிதாசன் மணிவிழாச் செயற்குழு

திருச்சி.

காலமும் கருத்தும்

வரவு செலவுத் திட்டம்

டில்லி சர்க்கார் நிதி அமைச்சரும், சென்னை நிதியமைச்சரும் புதிய வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். புதிய 'பட்ஜட்' என்றால் புதிய வரிகள் என்று தான் மக்கள் பொருள் கொள்வது வழக்கமாகி விட்டது. டில்லி பட்ஜட் அந்த வழக்கத்தை ஒட்டியே வெளியாகி இருக்கிறது. ரயில்வேக் கட்டண உயர்வு எந்த வகையாலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. லாபகரமாக நடந்து கொண்டிருக்கும் ரயில்வே நிர்வாகத்தில் மூலதனச் செலவுக்குப் பணம் வேண்டுமென்பதற்காகக் கட்டணத்தை உயர்த்தியிருப்பது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளைத் தான் இக் கட்டண உயர்வு மிகவும் பாதிக்கவிருக்கிறது. விலைவாசி ஏற்றத்தால் சொந்த வரவு செலவுத் திட்டத்தைச் சரிப்படுத்த முடியாமல் அல்லற்படும் சாதாரண மனிதனை, மேலும் தொல்லைக்காளாக்கியிருக்கிறது தேஷ்முக்கின் வரவு செலவுத் திட்டம். சென்னை சட்ட சபையில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் பட்ஜட் புது வரிகள் இல்லாத புதுமையோடு திகழ்வதால் 'அப்பாடா' என்று பெருமூச்சுவிட முடிகிறது. மேலும் நாடகங்களுக்குக் கேளிக்கைவரி நீக்கப்பட்டிருப்பதும் மகிழ்ச்சியான செய்தியாகும். மக்கள் வாழ்க்கைத் தரம் உயரக் காங்கிரஸ் அமைச்சர்களால் ஒன்றும் செய்ய முடியாமற் போனாலும், ஒவ்வொரு ஆண்டிலும் வெளியாகும் பட்ஜட் மூலம் நாட்டு மக்களுக்குப் புது வரிகள் மூலம் செலவும், எத்தனையோ தொல்லைகள் மூலம் வரவும் ஏற்படுவது இயற்கையான நிகழ்ச்சிகளாகி விட்டன.

திருச்சி ஜில்லா போர்டு

புதுக்கோட்டைப் பகுதி திருச்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு ஏறக்குறைய மூன்று ஆண்டுகளாகி விட்டன. இப்போதுதான் திருச்சி ஜில்லா போர்டில் புதுக்கோட்டைக்கு ஸ்தானங்கள் வழங்கச் சென்னை அரசினர் முன் வந்திருக்கின்றனர். முறையான ஏற்பாடு என்று அனைவரும் வரவேற்கவே செய்வர். ஆனால் புதுக்கோட்டைப் பகுதிக்காக ஆறு பேரைச் சென்னை சர்க்கார் நியமனம் செய்யவிருக்கிறது. முறைப்படி தேர்தலை நடத்தி உரிய பிரதிநிதிகள் ஜில்லா போர்டில் இடம் பெறச் செய்வது தான் நீதியாகும். இந்நீதிக்கு இடமில்லாதபடி 'நியமன' முறையில் திருச்சி ஜில்லா போர்டில் தங்கள் பிரதிநிதிகள் அறுவரைச் சென்னை அமைச்சர்கள், 'திணிக்க' இருக்கிறார்கள். இந்நியமனத்திற்குக் காரணமும் இருக்கிறது. திருச்சி ஜில்லா போர்டில் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்கள் படுதோல்வியடைந்தனர். தனிப்பட்டோர்

வெற்றி பெற்று, தோழர் ராஜா சிதம்பரம் தலைமையில் நிர்வாகம் இப்போது நடைபெறுகிறது. சாங்கிரஸ் உறுப்பினர் இப்போது 'மைனாரிட்டியாக' இருக்கின்றனர். இந்நிலையை மாற்றி 'மெஜாரிட்டி'யாக்கவே புதுக்கோட்டைப் பிரதிநிதிகள் நியமனம் செய்யப் படுகிறது என்று குறைகள் எழுப்பப்பட் டிருக்கின்றன. இக் குறைகட்கு ஆதாரம் இல்லாமலில்லை. சென்னை அரசினர், கட்சிப் பற்றற்று நடந்து கொண்டால், புகாருக்கு இடமிருக்காது.

அரிசி வருகிறது

இந்தியா—பாகிஸ்தான் ஒப்பந்தம் ஏற்பட்டு இரு நாடுகட்கும் வாணிபம் மீண்டும் நடைபெறத் தொடங்கி யிருக்கிறது. நாணயத்தின் மதிப்பை இந்தியா குறைத்ததும், பாகிஸ்தான் குறைக்காமல் அப்படியே வைத்திருந்ததுமே, இரு நாடுகளிடையே வாணிபம் நடைபெறத் தடையா யிருந்தது. இப்போதும் நாணய மதிப்பில் மாற்றம் ஒன்றுமில்லை. பாகிஸ்தான் ரூபாய் நூற்றுக்கு நம் ரூபாய் நூற்றி நாற்பத்து நான்கு கொடுத்துத் தான் ஆகவேண்டும். ஆனால் மூலப் பொருள்களான பருத்தி, சணல், முதலியன நமக்குத் தடை யின்றிக் கிடைக்கவும், கோதுமை, அரிசி முதலிய உணவுப் பொருள்கள் வரவும் இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது. பக்கத்து நாட்டில் அரிசியை வைத்துக்கொண்டு தூரத்து நாடுகளிடம் 'கை நீட்டிக் கொண்டிருந்த' நிலைமைக்குச் சிறிது விமோசனம் ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

சென்னை நண்பர்கள்

சென்னை நண்பர்களின் வசதிக்காக எங்கள் அலுவலகத்தில் "புத்தக விற்பனைப் பிரிவு" ஒன்று தொடங்கி யிருக்கிறோம்.

★

தமிழ்ப் புத்தகங்கள் அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

★

அலுவல் நேரம்:
காலை 9 மணி முதல்
மாலை 6 மணிவரை

★

"பொன்னி" அலுவலகம்
16, சேணி அம்மன் கோவில் தெரு.
(போலீஸ் ஸ்டேஷனுக்குப் பின்புறம்)
தண்டையார்ப்பேட்டை
சென்னை.

பொது மேடை

சில குறைகள்

பொன்னி மலர்ந்தாள் பொங்கல் நாளில். தமிழர் இதயம் மகிழ்ந்தது. அகிலனுடைய "மனிதன்", பாண்டுரங்கனுடைய "நினைவுகள்", வழிப்போக்கன் "பொங்கற் பரிசு"—சுவைத்து அனுபவித்தேன்.

திரு. வி. க. பேட்டி—அற்புதம்! ஒவ்வொரு தமிழ் அறிஞரையும் இதைப் போலப் பேட்டி காணுங்கள். அவர்கள் கருத்துக்களையும் தமிழ் நாட்டுக்கு அளியுங்கள். நாடு உங்களுக்கு நன்றி செலுத்தும்.

ஒன்று மறந்து விட்டேனே! செசாக்கின் அந்த ஓவியம்—"மாட்டுப் பொங்கல் எப்போ அண்ணேன் வருது?" இதைப் பார்த்தும் சிந்தனை தோன்றாதவன் மனிதனல்ல!

ஆனால்...! மலரிலே ஒன்றிரண்டு முட்கள்...!

"எது அறிவு"—பொன்னிக்கென்று அளிக்கப்பட்ட கட்டுரையல்ல. இது, பலபத்திரிகைகளிலே காணப்படுகிறது. படிப்போருக்குச் சலிப்புத்தான் ஏற்படும்.

"புதிய வேதம்"—முடிவு நல்லது, ஆனால் தொடக்கம் தொல்லையைத் தருகிறது. குறளுக்குத் தவறான கருத்துக் கொடுத்திருக்கிறார் எழுதியவர். "ரிக்ஷா இழுப்பவன் ஒருவன் அதில் ஏறிச் சவாரி செய்பவன் ஒருவன் என்று இருக்கும் இந்த நிலையை அறம் எனக் கருத வேண்டாம்" என்பது தான் அந்தக் குறளின் பொருள். ஆனால் ஆசிரியர் குறளை ஊன்றிக் கவனிக்காமலேயே பொருள் எழுதி விட்டார்.

"நீதியினிமித்தம் கஷ்டப்படுபவர்கள் பாக்கியவான்கள்—பரலோக ராஜ்யம் அவர்களுடையது."—இது தான் பைபிளில் காணப்படுவது. எழுதியவர் கண்களில் நீதி படவில்லை—மற்றதெல்லாம் தெரிந்திருக்கிறது.

திருச்சி
17-1-51 } டி. கே. சீனிவாசன்

○

வெட்கக் கேடு

நாட்டில் இன்று வறுமையும் பசியும் கோரத் தாண்டவ மாடுகின்றன. 'பொங்கல் விழா' நாட்களிலே பல இடங்களிலே கண்ணீரும், ஆத்திரமும், அழுகையுமே பொங்கின. நெசவாளர்களின் குடும்பங்கள் நடுத் தெருவிலே அலையும் நிலையும், பட்டினிப் பிணங்களும் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. ஆட்சியாளர்களோ ஆமை வேகத்தில் பிரச்சினைகளைக் கவனிக்கின்றனர். நெசவாளர் துயரம் சென்னை மந்திரிகள் காதுகளில் விழுவதற்கு இரண்டு மாதங்கள்: அங்கிருந்து டெல்லி செல்வதற்கு இரண்டு மாதங்கள் என்று உயிர்ப் பிரச்னைகளிலும் ஒரு முடிவுக்கு வருவதற்கு ஆட்சியாளர்களுக்குக் குறைந்தது நான்கு மாதங்கள் தேவைப்படுகின்றன. இப்போது கனம் முன்ஷியார் அறிவிக்கின்றார் கொடுக்கப்படும் ரேஷனில் உடனடியாக 3 அவுன்சுகள் குறைக்கப்பட வேண்டுமென்று. கொடுக்கப்

படும் ரேஷன் (12 அவுன்சு) நகர மக்களுக்குக் கூட அரை வயிற்றுக்குப் போதாது. கிராம மக்களுக்கு அதைச் சாப்பாடு என்றே சொல்ல முடியாது. நிலைமை இங்ஙன மிருக்க 12 அவுன்சையும் 9 அவுன்சாக்குவது கொஞ்சமும் நெஞ்சிரக்கமற்ற, பொறுப்பற்ற செயல் என்றே கூற வேண்டி யிருக்கின்றது. நாட்டில் எப்படியாவது நாங்களும் மக்களுக்கு உணவைத் தருகிறோம் என்ற முறையில் ஆட்சியாளர்கள் நடந்து கொள்ளுகின்றனரே யொழிய இவர்கள் மக்களைத் திருப்திப் படுத்தவோ அல்லது அவர்களது குறைகளைத் தீர்க்கவோ சிறிதும் முயலுவதில்லை. பட்டினிப் பிணங்களும், மக்களின் கண்ணீரும் இவர்களுக்குப் பழக்கப் பட்டவையாகி விட்டன. "என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக" என்ற சிறந்த நோக்குடைய பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்ட தமிழ் நாடு, குடிகளின் கண்ணீரை வெறும் மழை நீராக மதிக்கும் காங்கிரஸ் ஆட்சிக்குட் பட்டிருப்பது உண்மையிலேயே வெட்கம் தரும் செயலாகும்.

வேலூர்
24-2-51 } நெ. திரு. தர்மலிங்கன்

நெசவாளர் துயரம்

ஆவியினை "ஓட"த்தோ
  டங்கு மிங்கும்
அலையவிட்டு ஐம்புலனும்
  ஒன்றி நின்று
"பாவி"னிலே அடுக்கடுக்காய்
  நூலைக் கோத்து
பலப்பலமா திரிகளிலே
  ஆடை நெய்து
சீவிக்கும் சேணியர்க்கு
  நூலு மில்லை
செலவிற்குத் தருங்கூலி
  போத வில்லை
சாவினிலே துயர்தீர்த்துக்
  கொள்வ தொன்றே
தக்கமருந் தம்மம்மா!
  தருமோ சொல்வீர்?

"இங்குள்ள நூலெல்லாம்
  வடக்கு நோக்கி
ஏற்றுமதி செய்கின்றீர்
  எங்கோ வாழும்
வங்காளத் தகதிக்குச்
  சலுகை யுண்டிவ்
வளநாட்டு மக்களெல்லாம்
  வாடும் போது
சங்கடங்கள் கோடியெனப்
  பெருகு தையா
தந்திரமாய்ப் பேசுகின்றீர்
  "தொழிற்சங் கத்தால்
எங்களுக்குப் பயனென்ன?"
  என்று கேட்டால்
"இடுசிறையில்" என்கின்றீர்
  இதுவோ நீதி?

பால்வேண்டாம் பருகப்பழச்
  சாறு வேண்டாம்
பணக்குவியல் பட்டாடை
  பதவி வேண்டாம்
மேல்அடுக்கு மாடியுள்ள
  வீடும் அங்கு
மின்சார விசிறிகளும்
  விளக்கும் வேண்டாம்
கால்நோவா தேகுதற்குக்
  "கார்"கள் வேண்டாம்
கண்ணயரப் பஞ்சணைகள்
  கட்டில் வேண்டாம்

நூல் வேண்டும் எங்கள் நிலை
நோக்க வேண்டும்
கொடிப்பொழுதில் துயர் தீர்க்கத்
துணிய வேண்டும்

கல்லிடைக்குரிச்சி 15-2-51 } கே. டி. எம். அப்துல்காதர்

○

தமிழ் விருந்து

ஐந்தாவது ஆண்டு ஆரம்ப இதழ் கண்டு ஆனந்தம் கொண்டேன். அதேபோது கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தாருக்குப் 'பொன்னி' ஆற்றியிருக்கும் எண்ணற்ற அருஞ் செயல்கள் என் நினைவிற்கு வந்தன, மக்கள் மன்றத்திலே நிறுத்தப் படாத மதமாசுபடிந்திடாத, 'சிலப்பதிகாரக் காட்சி' போன்ற கலைச் செல்வங்களின் கருத்துக் குவியல்களை என் போன்றோர் அறிவுக்கு விருந்தாக்கிக் கொள்ள உதவின 'பொன்னி'க்கு என் வாழ்த்துக்கள்! தெவிட்டாத தேன் தமிழில் 'பொன்னி' தந்த 'துரோகி' வரலாற்றுச் சித்திரத்தை என்றும் என்னால் மறக்க இயலாது. சென்ற இதழில் முற்றுப் பெற்ற 'வானம்பாடி' மேட்டுக் குடியினரின் மேனி குலுங்காத வாழ்வையும் ஏழ்மை வட்டாரத்தின் நிலையையும் நம் நாட்டவர்க்கு நன்குணர்த்தி விட்டது. 10-2-51 இதழில் துவக்கப் பட்டுள்ள தமிழ்விருந்து போற்றலுக்குரியது. நாட்டு மக்களிடையே நடமாடும் நல்வாய்ப்புக் கிட்டாமல் இருக்கின்ற சங்க கால இலக்கியங்கள் 'தமிழ் விருந்து' வாயிலாகப் பவனி வரும் என்ற நம்பிக்கையால் அறிவுத் தாகம் கொண்ட நான் பெரு மகிழ்ச்சிக்கு என்னுள்ளத்தை உறைவிடமாக்கிக் கொண்டேன். வேற்று இனத்தாரின் சூழ்ச்சிகளால் பலியாக்கப் படாத செந்தமிழ்ச் செல்வர்கள் தமிழர் தம் பார்வைக்கு வரத் தமிழ் விருந்துப் பகுதி பயன்படும் என எண்ணுகிறேன்.

பாகலூர் 19-2-51 } க. கூடலரசன்

○

அற்புதம்

நான் தற்செயலாக என் நண்பர் ஒருவரின் கையிலிருந்த 10-2-51 பொன்னி இதழைப் பார்க்க நேரிட்டது. அதில் வெளியாகியுள்ள அட்டைப் படக் கதையும் டாக்டர் டம்பாச்சாரி என்ற ஹாஸ்யம் ததும்பும் கதையும் என் எண்ணத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டன.

பொது மேடைக் கடிதங்களில் மலரின் சிறப்பைக் குறித்து வெளிவந்துள்ள கடிதங்களைப் பார்த்ததும், பொன்னி பொங்கல் மலரை எப்படியாவது வாங்கி விட வேண்டுமெனத் துடியாய்த் துடித்தேன். இவ்வூரில் "பொன்னி"யின் ஏஜண்ட் யாரெனத் தெரியவில்லை. அதனால் மலர் வாங்குவதற்கென்றே சிரமத்தையும், செலவையும் பாராட்டாமல் "கோவை" சென்று வாங்கி வந்தேன். மலரைப் படித்ததும் அதன் சிறப்பை எப்படி எழுதுவதென்றே தோன்றவில்லை. அவ்வளவு அற்புதம், அபாரம் போங்கள்!

பாலக்காடு 17-2-51 } M. A. அஜீஸ்

இரவில்தனியாக இருக்கும்போதுதான்
பார்த்துக்கொள்ளவேண்டும்.

KOKSHASTRA (PRIVATE)

கொக் சாஸ்திரம் (இரகசியமானது)

284 படங்களுடன் விளம்பரத்தினுல் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன படிக்கிறவர்கள் நன்ருகவும், தெளிவாகவும், விஷயங்களைப் புரிந்துகொள்வார்கள். நல்லவிதமான 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக்சாஸ்திரம் தான் வெகு நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

BED ROOM PHOTOS—படுக்கை அறைப் படங்கள்

விலை ரூ. 1—8—0

உங்களுக்குப் படுக்கை அறைக் காட்சிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 4 அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள், 25 படங்கள் கொண்ட சாம்பிள் செட்டின் விலை ரூ. 2—4—0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்கவேண்டும்.

PARIS ART HOUSE, Dept. (Dpt—158/12)
Sitla Temple, *AMRITSAR*.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த.செ. தனி)

M/grs: SEENU & CO., Post Box, 1638, MADRAS-1.

பிரான்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

வெறும் கலாட்டா

பிப்ரவரிமீ 9உ யிலிருந்து மார்ச்மீ 3உ முடிய இடையிலுள்ள நாட்கள் மிகமிக முக்கியமான நாட்கள்! முக்கியமான நாட்கள் மட்டுமல்ல, அதிசயமானநாட்கள் என்று கூடச் சொல்லலாம். இந்த இருபத்துமூன்று நாட்களில்தான் உலகத்திலேயே நிகழாத அற்புதச் சம்பவம் நடந்து முடிந்திருக்கிறது. அது என்ன என்று கேட்கிறீர்களா? சரி, இதோ கேளுங்கள் :—

ஜன கணிதி
ஜன சங்கியை
குடி மதிப்பு
மக்கள் கணக்கு
சென்ஸஸ்

இந்த வார்த்தைகளை நீங்கள் அகராதியைத் தேடிப் புரட்டிப் படித்திருக்காவிட்டாலும் பத்திரிகைகளில் இப்பொழுது சர்வ சாதாரணமாகப் பார்த்திருக்கலாம். மேற்சொன்ன நாட்களில்தான் பிரிந்த இந்தியாவின் அதாவது பாரத மகாராஜ்யத்தின் முதலாவது மக்கள் கணக்கெடுப்பு நடந்து முடிந்திருக்கிறது. எனவேதான் அந்நாட்கள் மிகமிக முக்கியம் என்று சொன்னேன்.

"முக்கியம் என்பது கிடக்கட்டும் சார், எல்லா நாட்டிலும் செய்வதைப்போலத் தானே இங்கும் கணக்கெடுக்கிறார்கள். இதில் அதிசயம் எங்கிருந்து வந்தது?" என்று எங்கள் ஆபீஸ் பையன் அளகுசுந்தரம் அலுத்துப் போய்க் கேட்டான். நீங்கள் கூடக் கேட்பதற்கு யோசிக்கிறீர்களல்லவா? சரி, இதைக் கவனியுங்கள் ;—

கணக்கெடுக்கப்படும் மொத்த நாட்கள் 23. நம் நாட்டின் மக்கள் தொகையோ ஏறக்குறைய 30 கோடி. ஒவ்வொரு ஆளிடமும் கேட்கப்படும் மொத்தக் கேள்விகள் 14. ஒரு நாளைக்கு ஒரு அதிகாரி 1000 பேர்களைச் சந்திப்பதாக வைத்துக் கொண்டாலும் மொத்தம் 15000 அதிகாரிகள் வேண்டும். இப்போது பாருங்கள்; இந்த 15000 அதிகாரிகளும் 23 நாளைக்குள், 30 கோடி மக்களையும் கண்டு 420 கோடிக் கேள்விகளையும் பொறுமையோடு கேட்டுக் கணக்கெடுத்து முடிப்பதிலே சர்க்காருக்கு ஒரு பைசாக் கூடச் செலவு கிடையாது என்றால் இந்தக் கணக்கெடுப்பு அதிசயமானதுதானா இல்லையா?

○

சென்னை கவர்னர் சென்ஸஸைப் பற்றி ரேடியோவில் பேசும் பொழுது "இது உலகத்திலேயே பிரம்மாண்டமான கணக்கெடுப்பு. ஆனால் இதற்கென்று நாங்கள் தனியாக அதிகாரிகள் யாரையும் நியமிக்கவில்லை. சர்க்கார் சிப்பந்திகளுக்கே இதனை ஓர் 'கௌரவ வேலை'யாகக் கொடுத்து விட்டோம். எனவே இது உலகத்திலேயே மிகச் சிக்கனமான கணக்

கெடுப்புமாகும்'' என்பதாகப் பேசியிருக்கிறார்.

கவர்னரின் பேச்சு ஒருபுறம் கிடக்க, இன்னொரு சேதியைக் கேளுங்கள். இந்தக் கணக்கெடுப்பிற்காக ஜனகணிதிச் சீட்டுக்கள் அச்சடித்திருக்கிறார்களாம். அந்தச் சீட்டுக்கள் அனைத்தையும் ஒன்றாகக் கோர்த்து இரண்டு முனைகளையும் சேர்த்துக் கட்டினால் உலகத்தைச் சுற்றி ஒரு மாலையாகப் போட்டுவிடலாமாம். இது மட்டுமல்ல, உத்தரப் பிரதேசத்திற்காக அச்சடிக்கப் பட்டிருக்கும் சீட்டுக்களை மாத்திரம் வரிசையாக வைத்துக்கொண்டே போனால் சுமார் 5000 மைல் நீளத்திற்கு வருமாம்.

O

நடவாத நிகழ்ச்சிகள்

[சென்ஸஸ் விநோதங்களைப் பற்றித் தினசரி ஆபீஸுக்குக் கதை, கவிதை, கட்டுரைத் துணுக்குகள் வந்தவண்ண மிருக்கின்றன. அவற்றை யெல்லாம் அப்படி அப்படியே குப்பைத் தொட்டியில் போட்ட வண்ண மிருக்கிறார் ஆசிரியர். ஆனால் குப்பைத் தொட்டிகளெல்லாம் எனது உயிருக்குயிரான நண்பர்கள்! அவைகளின் உபயகுசலோபரிகளில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான். அவற்றிலிருந்து பொறுக்கிய ஒரு சில துணுக்குகளைக் கீழே போடுகிறேன்; காண்க!]

1

சுவரிலிருந்த கடிகாரம் ஐந்து தடவைகள் பயங்கரமாக அலறிவிட்டு ஓய்ந்தது. அப்பாவிக் கடிகாரம் எழுப்பிய ஓசையானது சுப்பாராவின் செவிகளில் நாராசம்போல் விழுந்தது. சலித்துப் புளித்துப் போய், சென்ஸஸ் ஃபைல்களைத் தூக்கிக்கொண்டு வண்ணாரப்பேட்டை வட்டாரத்தை விசாரிக்கச் சென்றார்.

செக்கு மாடுகளாவது சாயந்திரமானதும் புண்ணாக்கை அசைபோட்டுவிட்டு ஊறத் தண்ணீர் ஒரு 'கப்' குடித்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளும். பாவம், அவர் காப்பி கூடக் குடிக்காமல் கணக்கெடுக்கக் கிளம்பினார். அவர் மூளை கொதிப்படைந்திருந்தது. அப்போது...

வாசலைப் பெருக்கிக்கொண்டிருந்த ஒரு பெண்ணை அண்டினார் சுப்பாராவ்! கேள்விகளும் பதில்களும் சீனிப்பட்டாஸ் மாதிரி அங்கே வெடித்துக் கொண்டிருந்தன.

"அம்மா, தயவுசெய்து என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் ஆணா, பெண்ணா?''

அவள் கீழே கிடந்த 'சாமரத்தைக்' கையில் எடுத்துக்கொண்டாள். "ஏனய்யா, என்னைப் பார்த்தால் எப்படித் தோணுது?''

"மன்னிக்கவேண்டும். கேள்வி அப்படி இருக்கிறது. அதனால் தான் கேட்டேன்; உங்களுடைய சொந்த நாடு எது? ஆப்பிரிக்காவா, அமெரிக்காவா?''

"ஆப்பிரிக்காவுமில்ல, பேரிக்காயுமில்ல''

"சரி சரி; உங்கள் பெயர் என்ன சொன்னீர்கள்?''

"பாஞ்சாலி......''

"அப்படியா? உங்களுக்கு மொத்தம் எத்தனை புருஷர்கள்?''

"ஆங்......"

"ஐ ஆம் சாரி...... எத்தனை குழந்தைகள்......?"

அந்த அம்மாள் வைத்தியரின் மனைவியோ என்னவோ, சுப்பாராவின் சூடேறிப் போயிருந்த மூளையைக் குளிர வைப்பதற்காகவே, கையிலிருந்த சாணத் தண்ணீரை அவர் தலையில் கொட்டிவிட்டுப் போய்விட்டாள்; அவரும் தனது உள்ளக் கொதிப்பை ஆற்றிக் கொள்ளக் காப்பிக் கடைக்குள் நுழைந்து விட்டார்.

2

"பிரதர், நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?"

"சும்மாதான் இருக்கிறேன்"

"மாதம் எவ்வளவு ரூபாய் சம்பாதிக்கிறீர்கள்?"

"மாமனாரிடமிருந்து சும்மா, நானூறு ரூபாய் வருகிறது அவ்வளவுதான்"

"வேறு வழியிலிருந்து ஏதாவது வருமானம் வருகிறதா?"

"ஓ! நண்பர்களுக்கு நான் வழங்கும் கடன் பத்திரங்கள் மூலம் சும்மா ஒரு நூறு ரூபாய் வரும்"

"கல்யாணம் கில்யாணம் ஏதாவது......?"

"அதெல்லாம் சும்மா எங்க மாமனார் கண்ணிலே மண்ணைப் போடுவதற்காக. இப்போது நானும் சும்மாதான் இருக்கிறேன். அவளும் சும்மா தான் இருக்கிறாள். ஆமாம், இதெல்லாம் எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை; சும்மாதான் கேட்டேன்"

○

போகாத கடிதம்

சென்னை சர்க்கார் செக்ரடரியேட் கூடம் ஸ்ரீலஸ்ரீ சென்ஸஸ் சன்னிதானம் அவர்களுக்கு ஆண்டிப்பண்டாரம் அடக்க ஒடுக்கமாய் எழுதிக்கொள்வது:-

ஐயன்மீர்,

கடந்த இருபது நாட்களாய் உமது சிஷ்ய கோடிகள் ஊரெல்லாம் சுற்றி மனுசக் கணக்கு எடுக்கிறார்களென்று கேள்விப்பட்டோம். மனுசக் கணக்கிலே எங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எங்களுடைய மூலஸ்தானத்துப் பெரிய தலைகள் முன்னொரு சமயம் முறையிட்டுக் கொண்டது உமக்கு ஞாபகம் இருக்கலாம். அப்படியிருக்க, உமது சிஷ்யர்களுக்கு நாங்கள் இதுவரை மனுசர்களாய்த் தெரியவில்லை போலும்! போகட்டும்; எம்மைப்பற்றிய விவரங்களை நாமாகவே சொல்லிவிடுகிறோம் எழுதிக் கொள்ளுங்கள் :—

பேர் ;—பண்டாரங்களுக்குப் பேர் ஏதுங்க!

ஊர் :—இதுவும் அப்படித் தான்!

மதம் :—நீங்களாகப் பார்த்து எதையாவது எழுதிக்கொண்டால் சம்மதம்!

சாதி :—இருசாதியில் ஒரு சாதி!

தொழில்:—பிச்சை யெடுப்பது.

வருமானம் :—எங்கள் தொழிலில் வருமானம் வேறு வாழுகிறதா? மானம் போகிறது!

ஆணா பெண்ணா?:—நிச்சயம் நான் ஆண்தான். இதைத்தான் நான்காவது கேள்வியிலும் சொல்லியிருக்கிறேன்.

நோய் நொடி ஏதாவது ;—ஒன்றுமே கிடையாது. எப்போதாவது நொண்டியாவதுண்டு; குருடாவதுண்டு; குஷ்டரோகியாகக்கூட மாறுவதுண்டு; அதெல்லாம் தொழில் நுணுக்கங்கள்.

அப்பன்மீர்! இவ்வளவுபோதுமென்று கருதுகிறோம்; எம்மையும் மறந்துவிடாமல் மனுசக்கணக்கில் சேர்த்துக் கொள்ளுவீராக.

அடியேன்

ஆண்டிப் பண்டாரம்

[குறிப்பு: இந்த ராஜ்யத்தில் நாங்கள் மொத்தம் எத்தனை பேர் என்று இந்தக் கணக்கில் தெரிந்து விடுமல்லவா? அத்தனை பேருக்கும் 'தருமக் கூப்பன்' கொடுத்து விடுங்கள். அந்தக் கூப்பனைக் காட்டினால் தான் பிச்சை போடலாம் என்று ஒரு உத்திரவும் போட்டுவிடுங்கள். பிறகு திருட்டுப் பண்டாரங்கள் எவனும் பிச்சை எடுக்கக் கிளம்ப மாட்டான். ஒரிஜினல் பண்டாரங்களுக்கு இந்த ஒத்தாசை செய்வீர்களென்று நம்புகிறேன்]

ஒரு விளக்கம்

ஒரு குறிப்பிட்ட தேதியில் மட்டும் உயிரோடு இருக்கும் ஜனங்களின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதற்குத் தான் சென்ஸஸ் என்பது; அந்தத் தேதிக்குப் பிறகு பிறப்பவர்களெல்லாம் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்; அந்தத் தேதிக்குப் பிறகு இறந்தவர்களெல்லாம் இறவாத சிரஞ்சீவிகளாய்ச் சர்க்கார் ரிக்கார்டுகளில் காட்சியளிப்பார்கள்!

—கில்லாடி

காதற் போர்

பெரி. சிவனடியான்

கல்லூரி முடிந்ததென மணியடிக்கக்
கன்னிவரும் காலமென வேக மாக
எல்லோரும் உயிர்காக்கச் செல்வார் இல்லம்
என்விழியோ ஊர்சுற்றும்; அவளை நோக்கும்
செல்லாத காசாகத் தெருவில் நிற்பேன்
"தேர்வரினும் நகரீரோ" என்று பின்னே
கொல்லென்ற ஒலிகிளம்பும்; திரும்பிப் பார்ப்பேன்
குனிந்திடுவேன்; அவளில்லை; தோழன் நிற்பான்.

சென்றிடுவான் தோழனவன்; சீச்சி இந்தச்
செயலொன்றும் சரியில்லை; சிறப்பு மில்லை
நன்றியுடன் அவளை இனி நினைத்தல் குற்றம்
நடைப்பிணமாய் நாமலைந்து திரிதல் மட்டம்
கொன்றிடுவேன் அவள் நினைவை என்றே எண்ணிக்
கொடிக்கம்ப மாய்நிற்பேன்; பின்னிருந்தே
அன்புடனே யாரதெனும் ஓசை கேட்பேன்
அவளில்லை; ஆசிரியர் நிற்பார் அங்கே.

வெட்கமது தலைக்கேற, வீடு செல்ல
விரைந்திடுவேன்; தூரத்தில் பச்சை யாக
கட்ட கொடி நடந்துவரும் காட்சி காண்பேன்
நானவள்தான் என்றெண்ணி நடப்பேன்; ஆனால்
கட்டழகி அவளில்லை; வேறொருத்தி
கடுகிவழி சென்றிடுவாள்; காதற் போரில்
முட்டாளாய் மாறாத ஆளே இல்லை
முழுதுண்மை எனவருந்தி இல்லம் சேர்வேன்.

அஸ்திவாரமும் மாளிகையும்

வ. சம்பந்தன்

[நகரத்தின் நாகூக்கான பகுதி. காம்பவுண்ட் போட்ட பங்களா. ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணியிருக்கும்... பங்களாவின் முன்ஹாலில் சோபா ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு அன்றைய பேப்பரைப் படித்துக்கொண்டிருக்கிறார்...வீட்டின் முதலாளி உயர் திருவாளர் ராமநாத முதலியார் அவர்கள்... இலக்கியத்திலே ஊறித் திளைத்தவர் என்றும் உயர்ந்த கலாரசிகர் என்றும் வெகுவாகப் பாராட்டப் பட்டுப் பெருமிதத்துடன் பெரிய இடங்களிலே உலவி வரும் உயர்ந்த மனிதர் அவர்—பத்திரிகையைப்படிக்கிறார்]

ராமநாத: 'பார்லிமெண்டிலே பிரதமரின் வேண்டுகோள்...நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தீர்க்க எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டுமென இன்று பார்லிமெண்டிலே பேசும் பொழுது பிரதமர் தேசமக்களுக்கும், குறிப்பாகப்படித்த சமூகத்தினருக்கும் உருக்கமாக ஒரு வேண்டுகோள் விடுத்தார்.........

[முதலியாரின் மனைவி கமலாம்பிகை அம்மாள் வெற்றிலைப் பாக்குத் தட்டைக் கொண்டுவந்து எதிரே யிருக்கும் வட்ட மேஜை மீது வைக்கிறாள். முதலியாரின் கவனம் மாறுகிறது......
தட்டைப் பார்த்துக்கொண்டே]

ராமநாத: இது என்ன பாக்குன்னு கொண்டுவந்து வைத்திருக்கே. மனுஷன் போடற மாதிரியா இருக்கு இந்தப் பாக்கு?......'ரசிக்லால்'லே வாங்கிண்டு வரலையா? டிரைவர் என்ன தூங்கிண்டுதானே இருக்கான்?... போயிட்டு வரச்சொல்றது தானே...எல்லா இழவையும் நான் தான் கவனிச்சுக்கனுமா என்ன?

கமலா: டவுன் பக்கம் இன்னைக்கு அனுப்பலே. நாளைக்குத் தான் 'எல்லாராம்ஸ்' பக்கம் போக வேண்டியிருக்கேன்னு அப்படியே பாக்கும் வாங்கிண்டு வந்துடலாம்னு இருந்துட்டேன்.

ராமநாத: அதுவரைக்கும் இந்தக் கண்றாவியைத்தான் போட்டுத் தொலைக்கனுமா... ...உனக்கு என்னஇழவுதெரியுது? ..கொஞ்சமாவது 'ஈஸ்தடிக் சென்ஸ்' இருந்தாத்தானே!...

[அந்தச் சமயத்தில்வேலைக்கார முனுசாமி வருகிறான். முதலியார் அவனிடம்]

ராமநாத: என்னடா முனுசாமி என்ன?

முனுசாமி; யாரோ ஒருத்தர் எசமானைத் தேடிண்டு வந்திருக்காருங்க. இந்தச் சீட்டை உங்க கிட்டக்காட்டி அய்யாவைப் பாக்கனும்னு சொன்னாங்க (சீட்டைக் கொடுக்கிறான், முதலியார் வாங்கிப் படிக்கிறார்)

ராமநாத: "சோமசுந்தரம், செயலாளர், கலைவளர்ச்சிக் கழகம்" (முனுசாமியிடம்) சரி. வரச்சொல்

(முனுசாமி போகிறான். கமலாம்பிகை அம்மாள் உள்ளே செல்கிறாள். சற்றுநேரத்திற்கெல்லாம் வெள்ளை வெளேரென்று உடை உடுத்திய இளைஞர் ஒருவர் வருகிறார். முதலியாரைப் பார்த்துக் கும்பிட்டுக்கொண்டே)

சோம: வணக்கம்

ராமநாத: வணக்கம். உட்காருங்கள்....என்ன சமாச்சாரம்?

சோம: ஒன்றுமில்லை. எங்களுடைய கலைவளர்ச்சிக் கழகத்தின் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதென முடிவு செய்திருக்கிறோம். அந்த விழாவிலே தங்களைப்போன்ற சிறந்த அறிவாளிகளும் கலைஞர்களும் கலந்துகொண்டு எங்களைப் பெருமைப் படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்த வேண்டும். தாங்கள் தயவு செய்து மறுக்கக்கூடாது. மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

ராமநாத: (சற்றுயோசித்து) என்றைக்கு வைத்திருக்கிறீர்கள் நிகழ்ச்சியை?

சோம: இன்றைக்குப்பதினைந்தாம் நாள் ...ஞாயிற்றுக் கிழமையில் தான்.

ராமநாத: ரொம்ப நல்லது. அடுத்த ஞாயிற்றுக் கிழமையோ என்று பயந்து விட்டேன். ஏன் என்றால் அன்று நான் ஒரு பாத நாட்டிய விழாவில் தலைமை வகிக்க வேண்டியிருக்கிறது. கண்டிப்பாக வருகிறேன். இலக்கிய ரசனை, கலை வளர்ச்சி இது சம்பந்தமாய் நேரம் இருந்தால் எப்பொழுதுமே நான் மறுத்துச்சொல்வதில்லை. அதுவும் நம்முடைய தமிழ் நாட்டிலே இலக்கிய ரசிகர்களும் கலை ஆர்வம் கொண்டவர்களும் மிக விரிவான வகையிலே பெருகவேண்டு மென்பது தான் என் நோக்கமெல்லாம். ஆமாம்.... இன்னும் யார்யார் வருகிறார்கள்?

சோம: அதைச் சொல்ல மறந்து விட்டேனே...பேராசிரியர் சுந்தரராகவன் தலைமை வகிக்கிறார். 'திருமகள்' ஆசிரியர் ராமமூர்த்தி அய்யர் அவர்கள் 'கம்பனைக் காண்பது எப்படி' என்பது பற்றிப் பேசுகிறார். முடிந்தால் கவிஞர் சொக்கலிங்கம் பிள்ளையும் கலந்து கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார். தாங்கள் எந்தப் பொருள் பற்றிப் பேசுகிறீர்கள் என்று சொன்னால் நலமாகவிருக்கும்.......

ராமநாத: (சற்று நேரம் யோசித்துக்கொண்டே)....சரி....அவர் தான் கம்பரைப்பற்றி பேசுகிறார். அப்போ நான் திருக்குறளைப் பற்றிப் பேசுகிறேன். "வள்ளுவர் வகுத்த நாகரிசம்" என்று போட்டு விடுங்கள்.

சோம: ரொம்ப நல்லது. அப்படியே போட்டு விடுகிறேன். மற்றும் ஒரு தடவை உங்களைவந்து ஞாபகப் படுத்துகிறேன். (எழுந்து நின்று) அப்போ ...விடைபெற்றுக் கொள்கிறேன்...வணக்கம்....

ராமநாத : நல்லது... செய்யுங்க......(சோமசுந்தரம் போகிறார்..... கமலாம்பிகை கையில் இரண்டு சேலையுடன் வருகிறாள். கையிலிருந்த சேலையைக் காண்பித்துக் கொண்டே)

கமலா: இதோபார்த்தீர்களா.. ..நாளைக்குப் போகனும்னு சொன்னேனே... இன்னைக்கே புடிச்ச சேலைகளாப் பார்த்து 'எல்லாராம்' ஹவுஸிலேருந்து கொடுத்தனுப்பி யிருக்காங்க.......புடவைகளைப்பாத்திங்களா..விலைகூடக் கூடுதல் இல்லாம மலிவாத்தான் இருக்கு.

ராமநாத : (புடவைகளைப் பார்த்துக்கொண்டே) ஒவ்வொண்ணுக்கும் என்ன விலை போட்டு அனுப்பிச்சிருக்காங்க?

கமலா: (பில்லைப்பார்த்து) இந்த 'டிஷ்யூ' சேலைக்கு 150 ரூபாயும், இந்த 'சார்ஜட்' சேலைக்கு 90-ரூபாயும் தான் போட்டிருக்காங்க. ரொம்ப மலிவுதான்.

ராமநாத : சரிதான்...உனக்குப் பிடிச்சா சரி. ஆசைப்பட்ட பொருளை நான் ஏன் தடுக்கிறேன். நான் கடைக்குச் செக் அனுப்பிடறேன், சேலைகளைக் கொண்டு போய் வைத்துவிட்டு மேஜை மேலே திருக்குறள் புத்தகம் இருக்கு, கொடுத்தனுப்பு.

கமலா: ஆகட்டுங்க (போகிறாள். சற்று நேரத்திற்கெல்லாம் முனுசாமி புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறான். முதலியார் புத்தகத்தைப் பிரித்துத் தனக்குள்ளே படிக்கிறார்)

ராம: "பெயக் கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" (தனக்குள்ளே) அடாடா... என்ன ஆழமான கருத்து...என்ன அருமையான குறள்... எந்தக் காலத்திற்கும் பொருத்தமான வள்ளுவரின் வாக்கே வாக்கு!

"சார்"........

(மெள்ளக் கூப்பிட்டுக் கொண்டே டிரைவர் வேலாயுதம் உள்ளே வருகிறான். முதலியாரின் கவனம் மாறுகிறது. அவனைப்பார்த்து)

ராமநாத: என்னடா வேலாயுதம்...என்ன?

வேலா: (மெள்ளக் கையைப் பிசைந்து கொண்டே) ஒண்ணுமில்லேங்க...வந்து...

ராமநாத: என்னடா வந்தும் போயும்? என்ன இழவு...சொல்லித் தொலை.

வேலா: ரொம்பக் கஷ்டமாயிருக்குதுங்க எஜமான்...ஒண்ணும் சமாளிக்க முடியலேங்க... ஏதோ இந்த மாசத்திலேருந்தாவது, எஜமான் பெரிய மனசு பண்ணி, கொஞ்சம் சம்பளத்தைக் கூட்டிப் போட்டிங்கன்னா ரொம்பப் புண்ணியமாயிருக்குங்க...

ராமநாத: (முகம் மாறுகிறது. சற்று எரிச்சலுடன்) கஷ்டகாலந்தான்...யார் இல்லேன்னு சொன்னா...உனக்கு மட்டும்தான்

கஷ்டமா?......மாசம் முள்ளங்கிப்பத்தைமாதிரி நாற்பது ரூபாய் வாங்கிண்டு அதுக்கும்மேலே என்ன குமுட்டுதோ அய்யாவுக்கு?... அங்கங்கே இதுக்கு மேலத்தான் கொடுக்கரு னுங்களா?...எல்லாம் இன்னும் இரண்டு மூணு மாசம் போவட்டும்... அப்புறமா யோசிக்கலாம்... போ.

வேலா: (கெஞ்சுகிற குரலில்) மனைவி குளிருளிச்சிருக்கா யஜமான்...ஏதோ நீங்க பெரியமனசு பண்ணி கொஞ்சம் உபகாரம் பண்ணிங்கன்னுப் புண்ணியமா இருக்குங்க........

ராமநாத: (தீர்மானமாக) இதோ பார் டிரைவர்...அதான் இன்னும் இரண்டு மூணு மாசம் போவட்டும்னு சொல்றேனே.... இப்போ ஒண்ணும் என்னைத் தொந்தரவு செய்யாதே...போ... எனக்கு வேலையிருக்கு.

(டிரைவர் அதற்கு மேல் பேச முடியாமல் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே போகிறான்)

ராமநாத: (தனக்குள்ளே) கஷ்டம் தெரியாத பயல்க... எப்போ பார்த்தாலும் பணம் பணம்னு.. ... (மறுபடியும் குறளைப் புரட்டிப் படிக்கிறார்)

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகி.........

'தாயே...மகா லட்சுமி...இரண்டுநாளாப் பட்டினி மவராசி.... பசி வயித்தைக் கிள்ளுது தாயே...என்னவாவது பழசு கிழசு இருந்தாப் போடுங்க அம்மா...'

(நோஞ்சிப்போய்க் கிடக்கும் ஒரு எலும்புக் கூடு வெளியிலிருந்து கத்துகிறது. முதலியாரின் படிப்பு தடை பெறுகிறது)

ராமநாத: (கோபத்துடன்) டேய்...முனுசாமி...(கத்துகிறார்)

(முனுசாமி ஓடி வருகிறான். அவனைப் பார்த்து)

ராமநாத: எங்கேடா ஒழிஞ்சிப் போயிட்டே...வெளியே எவனோ கழுதை மாதிரி கத்துறான். அவனைப் போய் இன்னொரு இடம் போய்ப் பார்க்கச் சொல்லு..இந்தப் பிச்சைக்காரங்க எழவே பெரிய எழவாப்போச்சு.

(முனுசாமி பிச்சைக்காரனிடம் போய்)

முனுசாமி: டேய்...இன்னொரு இடம் போய்ப் பாரு... அய்யா சத்தம் போடறுரு... போ...

பிச்சை: (தளர்ந்த குரலில்) சாமி...இரண்டு நாளாப் பட்டினிங்க சாமி....பசி கும்முனு காதை அடைக்குதுங்க அய்யா...

ராமநாத: (உள்ளிருந்தே) ஏண்டா முனுசாமி இன்னும் போவலையா அந்தத் தடித் தாண்டவராயன் .....(பிச்சைக்காரனைப் பார்த்து) ஏண்டா... உனக்கு ஒரு தடவை சொன்னா உறைக்கலே ...உங்க நியூசன்சே பெரிசாப் போச்சு.... போடா... போ...பழசுமில்லே கிழசுமில்லே..

பிச்சை: மவராசா... உங்க காலிலே உழறேன் சாமி...இரண்டு நாளாப் பட்டினிங்க...

ஏதோக் காலணா அரையணா கொடுத்திங்கண்ணா......

ராமநாத : (வெளியே வந்து) காசு என்ன இங்கே கொட்டி வச்சிக் கிடக்கா? எங்கேயாவது வேலை செஞ்சிப் பிழைக்கறது தானேடா.......சோம்பேறிக்கழுதை மாதிரி நாள் பூரா எங்கேயாவது தூங்கிண்டு கிடக்கிறது....... சாப்பாட்டு வேளைக்கு 'கரெக்டா' பிச்சைன்னு வந்துடறது... போடா...போ

பிச்சை : எங்க சாமி வேலை கிடைக்குது? வேலையிலிருந்தா இப்படி ஏங்க வரோம்...

ராமநாத: எங்கேபாவது மமிட்டியை எடுத்துக்கினு கொத்தறதுதானே...வேலை கிடைக்கலையாம் வேலை...சோம்பேறி......

(கமலாம்பிகை உள்ளேயிருந்து வந்து கொண்டே)

கமலா : பிச்சைக்காரங்கிட்ட என்னங்க பேச்சு...நீங்க வாங்க சாப்பிட...டிபன் ஆறிப் போவுது!

ராமநாத : (முனுசாமியிடம்) டேய்...அவனைப் போகச் சொல்லிக் கதவை இழுத்துப் பூட்டு... ஏமாந்த சமயத்திலே எதையாவது சுருட்டிக்கொண்டு போயிடுவானுங்க திருட்டுக்கழுதைங்க... அதுக்குன்னே வாது (உள்ளே போகிறார்) .....

பிச்சைக் : (தெருவில்) ஐயோ...கடவுளே...உன் கண் என்ன அவிஞ்சா போச்சு... ஒரு வாய்த்தண்ணி ஊத்தமாட்டேங்கறாங்களே....இதிலே திருட்டுப்பயன்னு வேறே போரா........ ஐயோ...பசி காதை அடைக்குதே...ஐயோ (புலம்பிக் கொண்டே போகிறான்).....தெருவில் நின்றுகொண்டிருந்த வேலாயுதம் அவனைக் கூப்பிடுகிறான்.)

வேலா : இந்தாட்பா ...பிச்சைக்காரா...... இந்தா...

பிச்சை : (வந்து கொண்டே) சாமி ஏதாச்சும் இருந்து கொடுத்திங்கண்ணா புண்ணியமா யிருக்குங்க...

வேலா : (பக்கத்தில் நிற்கும் முனுசாமியைப் பார்த்து) ஏம்பா முனுசாமி...உங்கிட்ட ஏதாவது சில்லறைத் துட்டு இருக்குதா?

முனுசாமி : காலணாத் தாங்க இருக்கு...வெத்திலை பாக்கு வாங்க வச்சிருக்கேன்...எதுக்குங்க?

வேலா : பாவம் பசின்னு உயிரை விடறான்...பார்க்கச் சகிக்கலை...ஏதாவது போட்டு அனுப்பலாம்னா எங்கிட்ட ஒரு தம்பிடி கூட இல்லே...அதான் கேட்டேன்.

முனுசாமி : ஆமாங்க... ரொம்ப பரிதாபமாத்தான் இருக்கு. இந்தாப்பா (காலணாவை பிச்சைக்காரனிடம் கொடுக்கிறான்)...வெத்தலைபாக்கு இல்லாட்டாப் போனாப் போறது.

பிச்சை: சாமி தரும தொரைங்களே நீங்க மவராசனா இருப்பீங்க (கையெடுத்துக் கும்பிட்டு விட்டுப் போகிறான்)

வேலா : முனுசாமி...நம்ப

காலணு காசு போடறதிலேயா அவன் பசி அடங்சப் வோவுது. வயிற்றுக் கொடுமை பொல்லா தப்பா பொல்லாது !

முனுசாமி: என்னமோ போங்க டிரைவர்...ஏதோ நம் மாலே முடிஞ்ச உதவி..இதுகூடச் செய்யாட்டா பின்னே என்னுத் துக்குத்தான் இருக்கோம்...எஜமான் மாதிரி தரும தொரைங்க இருந்துட்டா...

வேலர்: இருந்துட்டா என்ன மோசம் போயிடுச்சி...முனுசாமி அதுமாதிரி தரும தொரைங்க தான் இப்ப ஏராளம்...அதான் திருவல்லிக்கேணியிலே என்னமோ ஸ்கூலாமே அதுக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்காராமே நம்ப யஜமான்...

முனுசாமி: பின்னே என்னுங்க குறைச்சல்...உடனே அனுதைங்க பசி தீந்துடாது?... என்னமோ போங்க......

(ஒரு கார் வந்து வாசற்படியில் நிற்கிறது. வெள்ளை வெளேரென்று ஜிப்பாவும் அங்கவஸ்திரமுமாக ஒருவர் இறங்குகிறார்... அவர் முனுசாமியைப் பார்த்துக் கேட்கிறார்.)

ஐயா இருக்காராடா உள்ளே?

முனுசாமி: இருக்காருங்க...போங்க...

(கார் சப்தம் கேட்டு ராமநாத முதலியார் உள்ளேயிருந்து வந்து கொண்டே)

ராமநாத: அடாடா... 'திருமகள்' பத்திரிகை ஆசிரியர் ராமமூர்த்தி அய்யர் வாளா? வாங்க...வாங்க...

(ஹாலில் சென்று இருவரும் சோபாக்களில் அமர்கிறார்கள்... அய்யர் சிரித்துக்கொண்டே)

ராமமூர்: ஒன்னுமில்லீங்க ... சும்மா அப்படி ஞாயிற்றுக் கிழமைதானே...உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்..(பக்கத்திலிருக்கும் குறளை எடுத்து) என்ன குறள் ஆராய்ச்சி செய்றீங்களா?...அவசியம் உங்களைப் போல அறிவாளிகளெல்லாம் இந்தமாதிரி வேலையிலே இறங்கிக் கலாதேவிக்குத் தொண்டு செய்தால் நம்ப தமிழ் நாட்டுக்குப் பெரிய புண்ணியம் மாதிரி...நம்ப மொழியினுடைய சிறப்பைப்பற்றி, நம்ப நாட்டு இலக்கியங்களைப்பற்றி யெல்லாம் பேசவும் எழுதவும் எல்லாம் தங்களைப் போன்ற அறிவாளிகளால் தானே முடியும்? (சிரிக்கிறார்)

ராமநாத: அதெல்லாம் நான் என்ன பிரமாதமாகச் செய்துவிடுகிறேன். 'கலை வளர்ச்சிக் கழக' ஆண்டு விழாவிலே குறளைப்பற்றிப் பேசறேன்னு ஒத்துக்கொண்டேன். அதுக்காக, ஒழிஞ்ச நேரத்திலே அப்படிப் புரட்டிக் கொண்டிருந்தேன்...ஆமா... நீங்க கூடக் 'கம்பரை'ப்பற்றிப் பேசுவதாய்க் கேள்விப்பட்டேனே? ...



ராமமூர்: ஆமாம்... அந்த செக்ரட்ரி சோமசுந்தரம் ரொம்பநல்லவர். சிறந்த கலாரசிகர். அதனுலே வந்து கேட்கிற பொழுது எப்படி மாட்டேன்னு சொல்

றது? நீங்களும் கலந்து கொள்கிறீர்கள் என்று தெரிந்தது ரொம்பவும் சந்தோஷம்.... (சற்று நிறுத்திய பிறகு) இந்த வருடம் 'திருமகள்' தீபாவளி மலர் போடப்போகிறேன். தங்களைப்போன்ற அறிவாளிகள், கலாரசிகர்கள், தலைவர்கள் எல்லோருடைய கதைகளையும் கட்டுரைகளையும் போட்டு மலரை அலங்கரிக்கப்போகிறேம். அதற்காகத்தான் தாங்களும் மலருக்கு விஷயதானம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக வந்தேன். தங்களுக்கு ஆயிரம் தொந்தரவு... பல வேலைகள்... இருந்தாலும் சிரமத்தைப் பாராட்டாமல் தாங்களும் எழுதணும்... அதுக்காகத்தான் நேரிலேயே வந்தேன்...

ராமநாத: தீபாவளி மலருக்குத்தானே... அதிலே என்ன தடை... தமிழ் மொழி மிகவும் கொடுத்து வைத்தது தான். உங்களைப் போன்ற கலை ஆர்வமும் இலக்கிய அறிவும் அமைந்த ஆசிரியர்கள் செய்யும் இந்த மாதிரித் தொண்டுகளினுல்தான் தமிழும் கலையும் நாட்டிலே வளருகிறதென்று தீர்மானமாகச் சொல்லலாம் ... கண்டிப்பாக எழுதுகிறேன் ... மொழிக்காகட்டும், கலைவளர்ச்சிக்காகட்டும், எப்பொழுதும் என்னுல் முடிந்த உபகாரத்தைச் செய்யத் தயார்...

ராமமூர்: ரொம்பச் சந்தோஷம் ...உங்களைப் போலப் பெருந்தன்மையும் கலைஆர்வமும் எல்லோருக்கும் இருக்கவேண்டும்... அப்போ... நான் வரேன்... (எழுந்திருக்கிறுர்)

ராமநாத: என்ன எழுந்து விட்டீர்கள்... உட்காருங்கள்... சும்மாப் போறதாவது.... டிபன் பண்ணிவிட்டுப் போகலாம்.

ராமமூர்: பரவாயில்லை... பசியே இல்லை ... இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு வந்தேன் (சொல்லிக்கொண்டே உட்காருகிறுர்)

ராமநாத: பசியாவது......... இல்லையாவது... ஏதோ போட்டு வையுங்களேன்..... வந்தவங்களைச் சும்மா அனுப்பறதாவது...இது கூடச் செய்யாவிட்டால்... (தூரத்தில் நிற்கும் முனுசாமியைக் கூப்பிட்டு) டேய் முனுசாமி... உள்ளே போய் அய்யரை டிபன் கொண்டுவரச் சொல்லு...

(முனுசாமி போகிருன். சற்று நேரத்திற்கெல்லாம் சமையல்கார அய்யர் டிபன் கொண்டுவந்து வைக்கிறுர்)

ராமமூர்: (சாப்பிட்டுக் கொண்டே) இது எதற்கு இரண்டு மூனு ஸ்வீட்?... வயிற்றில் இடமே இல்லையே... சாப்பிட்டு விட்டு எப்படி நடக்கிறது? ...(சிரித்துக்கொண்டே சாப்பிடுகிறுர்)

ராமநாத: பரவாயில்லை ஆசிரியர்வாள்... இது என்ன பிரமாதம் ......(சற்று நேரம் சென்று) ஆமாம்... சமீபத்தில் நான் எழுதின புத்தகம்.........அதுதான் 'கலையை ரசிப்பது எப்படி?'

என்பது உங்களுக்கு வந்துதோ? 'திருமகள்'லே ஒன்றும் விமரிசனத்தைக் காணோமே?...

ராமமூர்: (சாப்பிட்டுக் கொண்டே) அதுவா...வந்தது. நானே எழுதவேண்டுமென்று எடுத்து வைத்திருக்கிறேன்...Sub கிட்டக் கொடுத்தா எழுதினவர் தாரதம் தெரியாமல் கண்டபடி கிறுக்கி விடுவார்கள் பாருங்க... அதற்காக எடுத்து வச்சிருக்கிறேன்...அதெல்லாம் ஜோரா எழுதறேன்! நீங்க ஒன்றும் கவலைப்படவேண்டாம்!...

ராமநாத :—அது ஒன்றுமில்லை ...சும்மா அப்படி உங்க காதிலே போட்டுவச்சேன்......

ராமமூர்: (சாப்பிட்டு முடித்துவிட்டு) இதுகூடச் சொல்ல வேண்டுமா? நம் ஒருத்தருக்கொருத்தர் இதுகூடச் செய்யவில்லை என்றால் எப்படி முதலியார்...!...அப்போ...நான் விடை பெற்றுக் கொள்கிறேன்...... ரொம்ப சந்தோஷம்!...

ராமநாத: ஆகட்டும்.......... ஞாபகம் இருக்கட்டும்...கட்டுரை அனுப்பி விடுகிறேன்...ஆண்டு விழாவிலே சந்திப்போம்.......(ஆசிரியர் போகிறார்......முதலியார் உள்ளே செல்கிறார்.)...

2

இருபது தினங்கள் கழித்து ஒரு நாள் பகல் மூன்று மணியிருக்கும். தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காரில் உட்கார்ந்துகொண்டு டிரைவர் வேலாயுதம் என்னவோ பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கிறான். முனுசாமி வருகிறான்....டிரைவரைப் பார்த்து)

முனுசாமி: என்ன டிரைவர் சார்...என்ன படிக்கிறீங்க?

வேலா: முனுசாமியா... வாப்பா...வேலையெல்லாம் முடிஞ்சிடுத்தில்லே....ஒண்ணுமில்லை... 'திருமகள்' பத்திரிகை...அய்யா இறங்கிப் போறப்ப ஞாபகமறதியா காரிலே வைச்சுட்டுப் போயிட்டாங்க...அதான் படிச்சுட்டுக் கொடுக்கலாம்னு புரட்டிண்டு இருக்கேன்...அய்யாவைப் பத்திப் பிரமாதமா எழுதியிருக்கு.

முனுசாமி: பிரமாதமாகவா... அய்யாவைப் பத்திங்களா...அன்னிக்கு வந்தாரே அந்த அய்யர் தானுங்களே இந்தப் பத்திரிகைக்காரரு...பின்னே குறைச்சா எழுதுவாங்க...என்னதான் எழுதியிருக்கு...கொஞ்சம் படியுங்களேன்...கேட்போம்...

வேலா: (படிக்கிறான்) "கலை வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டு விழா இன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் சுந்தரராகவன் அவர்கள் தலைமை வகித்தார். சிறந்த அறிஞரும், தரும குணமும் கலை ஆர்வமும் உடைய ராமநாத முதலியார் அவர்கள் 'வள்ளுவர் வகுத்த நாகரிகம்' என்ற தலைப்பில் இலக்கிய நயமும் ரசிகத்தன்மையும் சிறந்து விளங்கும் படியாக ஒரு அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர்

பேச்சிலே நாட்டின் கலை வளர்ச்சிக்குத் தேவையான பல அரிய கருத்துக்கள் பொதிந்து கிடந்தன... அவர் சொன்னார்......."

முனுசாமி : இதை விட்டா வேற ஒண்ணுமில்லீங்களா பத்திரிகையிலே ?

வேலா :—இன்னும் இருக்கப்பா. இஃதோ நம்ம அய்யா எழுதின "கலையை ரசிப்பது எப்படி?" என்ற புத்தகத்தைப் பற்றிப் பிரமாதமா விமர்சனம் வந்திருக்கு முதல் பக்கத்திலே! படிக்கிறேன் கேள் (படிக்கிறான்) "அறிவுக்கடல் ராமநாத முதலியார் ஒரு சிறந்த ரசிகமணியும்கூட என்பது இந்தப் புத்தகத்தின் மூலம் நன்றாகத் தெரிகிறது. அவர்கள் இந்தப் புத்தகத்தை எழுதியதின் மூலம் கலை வளர்ச்சிக்கே, இலக்கிய உலகிற்கே ஏன் தமிழ் நாட்டிற்கே சிறந்த சேவை செய்திருக்கிறார். ஒவ்வொருவரும் தவறாமல் படிக்க வேண்டிய புத்தகம் ...கலாரசிகர்கள்...

முனுசாமி : டிரைவர்...சார்... சரி...சரி...நிறுத்துங்க...,அது என்ன கலையோ எழவோ யாருக்குங்க தெரியறது அதெல்லாம் ? அதெல்லாம், பெரிய மனுசரு சமாச்சாரம் ...இங்கே கூழுக்கே தாளம் போடறப்ப கலையாவது ? மண்ணாவது ?...(திரும்பி எதையோ பார்த்து அதோ பாத்தீங்களா...? அது என்னாங்க கூட்டம் அப்படி அங்கே?

(அரை பர்லாங் தூரத்தில் தெருவில் ஒரு சிறிய கூட்டம் கூடியிருக்கிறது. அந்தப் பக்கத்திலிருந்து ஒரு ஆள் வருகிறான்)

வேலா :—(அவனைப் பார்த்து) எம்பா ...அது என்ன கூட்டம்...என்ன சமாச்சாரம் ?

ஆள் : ஒண்ணுமில்லீங்க... இந்தப்பக்கத்திலே பிச்சைக்காரன் ஒருத்தன் சுத்திட்டு இருக்கமாட்டான்... அவன் செத்துப் போய்க்கிடக்கிறான்.. அதாங்க .(சொல்லிக் கொண்டே போகிறான் அந்த ஆள் டிரைவரைப் பார்த்து)

முனுசாமி: அன்னைக்கு காலணா போட்டனுப்பிச்சமே.. அந்த ஆள் போயிருக்கு...... பாவம் போயிட்டானா...(குரல் கம்முகிறது) என்னமோ போங்க ...என்ன உலகமோ ?

வேலா : முனுசாமி.........! சோத்துக்கில்லாமயே கடைசிலே செத்தான்! பாவம்! இப்படி ஏழை எளியதுங்க, உழைப்பாளிங்க......வயித்துக் கொடுமை தாங்காம பசியினாலே செத்துப் போற பிணங்களையெல்லாம் குவித்து அஸ்திவாரமாப் போட்டுத்தான் அதன்மேலே சங்கீதம், சாஸ்திரம், பாட்டு, நாட்டியம், இலக்கிய ரசனை, கலைக்கோயில் அது இதுன்னு பெரிசு பெரிசா மாளிகை கட்டிட்டுப் போறாங்க பெரிய மனுஷனுங்க... பின்னே எப்படிப் பெரிய மனுஷன் இன்னும் பெரிய மனுஷனாவது—என்னமோபோ... அவங்களுத்தான் காலமாயிருக்கு! (பெருமூச்சு விடுகிறான்) (திரை)

எது உண்மை?

இராதா மணாளன்

மாலை நேரம்! கடற்கரை ஓரம்! வெண் மணல் பரப்பில், வேதனை நிறைந்த முகத்தோடு முத்தையன் உட்கார்ந்திருந்தான். அன்று அவன் மனம் ஏதேதோ எண்ணங்களால் குழப்பமடைந்திருந்தது. ஏழ்மை நிலையில் இருக்கிறான் என்பதை எடுத்துச் சொல்லியது அவனது கிழிந்த ஆடை! அறிஞன் அவன் என்பதை அறிமுகப்படுத்தியது, அவனது கண்களிலிருந்து வீசிய ஒளி!

கையிலிருந்த ஒரு சிறிய புத்தகத்தை விரித்தான், படிக்க. அதற்குள் "முத்தையா!" என்று யாரோ தன்னை அழைப்பதைக் கேட்டதும், முகம் நிமிர்ந்து பார்த்தான். அவன் எதிரே சிரித்துக்கொண்டே வந்து நின்றான், ரகுபதி.

"வா, ரகுபதி! உட்கார்!"

முத்தையன் அருகே ரகுபதி உட்கார்ந்தான். சிறிது நேரம் இருவரும் எதை எதையோ குறித்துப் பேசினார்கள். சில்க் ஜிப்பா, கழுத்தில் பொன்சங்கிலி, கையில் தங்கக்கெடிகாரம், விரல்களில் வைரமோதிரங்கள், அழுத்தி வாரிவிடப் பட்டிருந்த கிராப், அழகிற்காக நெற்றியில் வைத்துக் கொண்டிருந்த குங்குமப்பொட்டு—இப்படி ஒரே அமர்க்களமாக இருந்தான், ரகுபதி! அவனைப்பார்த்தால், யாரோ சினிமா நடிகன் என்றுதான் பலரும் எண்ணுவார்கள்! ஆனால் அவன் நடிகன் அல்ல, ஒரு எழுத்தாளன்!

"முத்தையா, இதென்ன கோலம்?"

"எதைச் சொல்லுகிறாய், ரகுபதி?",

"கிழிந்த சட்டையை மாட்டிக் கொண்டிருக்கிறாயே — அதைத் தான் சொல்லுகிறேன்!"

"ஓகோ அதைப்பற்றியா கேட்கிறாய்? நல்ல சட்டை இல்லை, அதனால்..........."

"உன்னைப்பார்க்கும் போதே அது தெரிகிறதே! உனக்கேன் இந்த நிலை? நல்லபடிப்பு இருக்கிறது; நன்றாக எழுதும் திறமை இருக்கிறது; இருந்தும், கிழிந்த சட்டையோடும் பாட்டைத் தலையோடும் இருக்கிறாய்! ஏன்?..."

"வாழ்க்கையில் பற்று இல்லை என்கிறாயா?"

"அல்ல, வாழும் விதம் தெரியவில்லை என்கிறேன்! பொதுவாக எழுத்தாளர்கள் சோற்றுக்கே திண்டாடுவார்கள் என்பதைப் பலரும் கூறுவது வழக்கம்! அப்படித்திண்டாடும் உன் போன்ற எழுத்தாளர்களை, பைத்தியக்காரர்கள் என்றுதான் நான் கூறுவேன்! மக்களுக்குப் பிடிக்காததை—அவர்கள் மனதை நோகச்செய்யக் கூடியதை ஏன் எழுத வேண்டும்? பிறகு ஆதரவு கிடைக்கவில்லையே என்று சோர்வடைவானேன்?"

"ரகுபதி! ஆதரவு எதிர்பார்ப்பவர்கள் யார்? சோர்வடைபவர்கள் யார்? என் லட்சியம் என்னவென்றே தெரியாதவனைப் போல பேசுகிறாயே!"

"லட்சியம்! நீயும் உன் லட்சியமும் பாழாய்ப் போயிற்றுப் போ! 'இவ்வுலகில் துன்பப்பட்டால், அவ்வுலகில் இன்பம் கிடைக்கும் என்று சொல்லுவதெல்லாம் பித்தலாட்டம்! ஏமாளிகளை ஏய்க்க வஞ்சகர்கள் செய்து வைத்த சூழ்ச்சி ஏற்பாடு!" என்றெல்லாம் நீ அடிக்கடி எழுதுவாய் அல்லவா? இது உன் உண்மையான கொள்கையாக இருந்தால், இந்த உலகத்தின் இன்பங்களை வாரிவாரி எடுத்து உண்ண முயற்சி செய்யாமல், ஏன் கிழிந்த ஆடையோடு ஏழ்மைக் கோலத்தில் நீ இருக்கிறாய்?"

"சுகபோகத்தோடு வாழ வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை என்று எண்ணுகிறாய்? ஆனால் நான் வாழ வேண்டும் என்ற எண்ணத்தைவிட, நம் இனம் வாழவேண்டுமென்ற எண்ணம் எனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது! அந்த லட்சியத்திற்காகப் பாடுபடும்போது, தொல்லைகள் பலவருவது சகஜம்! இப்பொழுது கையில் பணம் இல்லை..............."

"அதைத்தான் நானும் சொல்லுகிறேன்! பணம்தேடும் பாதையில் நுழைய நீ பயப்படுகிறாய்! கல்லூரியில் நாம் இருவரும் படிக்கும் போது, உன்னைவிட நான் ஏழ்மை நிலையில் இருந்தேன். என்னைப்பார், இப்பொழுது எப்படி இருக்கிறேன்! முன்னைவிட மூன்று மடங்கு கொழுத்து இருக்கிறேன்! வாடகைதரப் பணமில்

லாமல் திண்டாடி, பலரிடம் நீட்டிய இந்தக் கையில் இப்பொழுது வைரமோதிரங்கள் ஜொலிக்கின்றன அல்லவா? எப்படி வந்தன இவை எல்லாம்?"

மூத்தையன் உரக்கச் சிரித்துக் கொண்டே, தன் கையிலிருந்த புத்தகத்தைக் கீழே வைத்தான்! ரகுபதி ஒன்றும் புரியாமல் விழித்தான்!

"ஏன் சிரிக்கிறாய் இப்படி?"

"கணவனோடு வாழும் ஒழுக்கமுள்ள ஒருத்தியைப் பார்த்து 'உன் கழுத்தில் கண்ணாடி மணி இருக்கிறது, என் கழுத்தில் நெக்கிலிஸ் இருக்கிறது-எனக்கு எப்படி இது வந்தது?' என்று கேட்டாளாம் ஒரு விபசாரி! ரகுபதி, அதுபோல இருக்கிறதே உன் பேச்சு!........

"எனக்கென்று ஒருகட்சி இருக்கிறது. அதற்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. அந்தக் கொள்கைகளை நாட்டில் பரப்புவதே என் நோக்கம்—கடமை! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் மக்கள், அவ்வளவு சுலபத்தில் எங்கள் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! வெள்ளத்தை எதிர்த்து நீந்துகிறோம். எதிர் நீச்சல்காரர்கள் நாங்கள்! சிரமம் அதிகமாகத்தான் இருக்கும்! ஆடை கிழிந்திருக்கும்! அரைவயிறுச் சோற்றுக்கும் பஞ்சமிருக்கும்! உனக்கும் உன்னைப் போன்ற எழுத்தாளர்களுக்கும் தனிப்பட்ட நல்ல நோக்கம் ஒன்றும் கிடையாது! உங்கள் கொள்கை எல்லாம், பணம்—பணம்—பணம் தான்! அதற்காக நீங்கள் எதையும் எழு

சென்ஸஸ் அதிகாரி: எம்மா, உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?
பெண்: என்னங்க, இதெல்லாம் எங்க வீட்டுக்காருக்கிட்டக் கேளுங்க!

தத் தயார்! 'காமக் குளத்தை தோண்டினால் பணம் கிடைக்குமா—சரி, அப்படியானால் எழுது! சினிமா நடிகைகளைப் பற்றி ஆபாசமாக அளந்து கொட்டினால் பணம் வருமா—சரி அப்படியானால் எழுது!' இந்த நோக்கத் தோடுதானே நீங்கள் பேனா பிடிப்பதே! பணம்கொடுத்தால் ஒரு புனைப்பெயர் வைத்துக் கொண்டு, மடாதிபதிகளின் காமலீலைகளை, உங்கள் கூட்டத்திற்கே சொந்தமான தமிழ் நடையில் வெளுத்துக் கட்டுவீர்கள்! மடாதிபதிகளின் தாசர்கள் வந்து மறுநாள் பணம் தந்தால், அவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்வதாகவும். கடவுளின் பூர்ண அருளுக்கும் அன்பிற்கும் பாத்திரமானவர்கள் என்றும், தூய ஒழுக்கம் கொண்ட இந்த மகான்களைத் திட்டும் பாபிகள் நாசமாகப் போய்விடுவார்கள் என்றும், நேற்று மடாதிபதிகளைக் கண்டபடித் திட்டி எழுதின

"உங்கள் பேச்சைக் கேட்ட பிறகுதான் இங்கர்சால் சொன்னது உண்மைன்னு தெரிந்ததுங்க"
"அப்படியா, இங்கர்சால் என்ன சொன்னார்?"
"அறிவாளிகளைவிட முட்டாள்கள்தான் நன்றாகப் பேசுகிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார்"

அதே பேனாவே இன்று வேறொரு புனைப் பெயர் வைத்துக் கொண்டு எழுதித்தள்ளும்! பணத்திற்காக உடலை விற்கும் விபசாரிகளைவிட, பணத்திற்காக எழுத்தை விற்கும் நீங்கள் மிக மிகக் கீழானவர்கள்! விபசார எழுத்தாளன் வித விதமான ஆடை ஆபரணங்களோடு ஒய்யாரமாகத்தான் வாழ்வான்—இதிலென்ன அதிசயம், ரகுபதி!"

"எதிர் நீச்சல் எழுத்தாளரே! அடுத்த வேளைச் சோற்றுக்குப் பணம் பையிலிருக்கிறதா, பாருங்கள்!"

"விபசாரியின் தானத்தை ஆண்மை உள்ளவன் ஏற்கமாட்டான் என்பது உனக்குத் தெரியுமா?"

"கோபித்துக் கொள்ளாதே முத்தையா! நான் வரும்போது, உன் முகம் வாடி யிருந்ததே என்று கேட்டேன்!"

"அதுவா? ஒப்பற்ற ஒரு தலைவரைப் பற்றி, உன்னைப் போன்ற ஒரு விபசார எழுத்தாளன், கண்டபடி இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறான்! அதை நினைத்தாலே என் மனம் வேதனை அடைகிறது! பொய்யே எழுதுவது—அதுவும் பொறுப்பில்லாமல் எழுதுவது—என்று திரியும் இவர்களை ஏன் தூக்கில் போடக் கூடாது!"

"எழுத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்று நீங்கள் தானே அதிகமாகக் கூச்சல் போடுகிறீர்கள்!"

"ரகுபதி, உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா? பெண் சுதந்திரம் தேவை என்றால், அவளுக்கு விபசார அனுமதிச் சீட்டு கொடுப்பது என்றா பொருள்?"

ரகுபதி பேசாமல் எழுந்து சென்று விட்டான். அவன் சென்ற திக்கை நோக்கி, காரித் துப்பினான் முத்தையன்! "முத்தையன் ஒரு முட்டாள்!" என்பது ரகுபதியின் எண்ணம். "ரகுபதி ஒரு அயோக்கியன்!" என்பது முத்தையனின் கருத்து! எது உண்மை?

25-2-51 இதழ்

'பொன்னி' அச்சிடும் அனுமதி மாற்றம் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் 25—2—51 'பொன்னி' இதழ் வெளிவரவில்லை யென்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகிறோம். இனிமேல் உரிய நாளில் இதழ்கள் தவறாமல் வெளிவரும் என்ற உறுதியையும் அளிக்க விரும்புகிறோம்.

ஏய் காளி

எஸ். ஆறுமுகம்

ஆறந்தாங்கி ஸ்டேஷனில் ரயில் நின்றது தான் தாமதம்; ரயிலினின்றும் ஜனங்கள் கும்பல் கும்பலாக இறங்க ஆரம்பித்தனர். அவர்களில் குமாரசாமியும் ஒருவன். தலையில் சுமந்திருந்த பெரிய மூட்டையுடன் ரயில் நிலையத்தை விட்டு ஊருக்குள் நடந்தான். வெய்யிலின் வெச்சை சற்று தணிந்திருந்தது; அந்தி மயங்கும் வேளை.

ஊரின் முன்னடியிலிருந்த கடையில் 'சாயா' குடித்துப் பணத்தைமுதலாளியிடம் நீட்டிய வண்ணம், "ஏனுங்க, ஆவணத்தாங் கோட்டை வரை துணைக்கு ஒரு ஆள் வேணும். சில்லரை ஏதாச்சும் கொடுத்துடலாம்: கிடைக்குங்களா?" என்று கேட்டான் குமாரசாமி.

"அவசியமானு ஒரு ஆளை வாச்சொன்னாப் போச்சு" என்று சொல்லிவிட்டு, 'ஏய், காளி" என்று அழைப்பைச் சுண்டிவிட்டான். சோம்பல் முறித்து விசித்தெழுந்த காளியை ஏற இறங்கப் பார்த்தான் குமாரசாமி.

"காளி, சீக்கிரம் எழுந்திருப்பா. ஒருகிராக்கிவந்திருக்கு. பாக்கி தூக்கத்தைத் திரும்பவந்து மறந்துடாமல் தூங்கிக்கலாம். ஐயாவோடே சாலைவரை போகணும்" என்று மேலும் துரிதப் படுத்தினான் டீக் கடைக்காரன்.

கந்தலும் கிழிசலுமாகப் பார்க்கப்பரிதாபமாகத் தோற்றம் கொடுத்த காளிக்கும் ஒரு தேத்தண்ணீர் வாங்கிக்கொடுத்துப் புறப்பட்டான் குமாரசாமி.

அந்தி மங்கல் எங்கும் படர்ந்தது. சூரியனின் கதிர்கள் பொன் ரேக்குப் பெற்றுப் பிரகாசித்தன. இயற்கை கண்ணாமூச்சு விளையாடியது.

மூட்டையை இதம் பதமாகத் தோளில் சாய்த்துத் தலைமுண்டாசுக்கு அணைவாக வைத்துக் கொண்டு காளி முன் சென்றான். குமாரசாமிக்கு அவனையுமறியாமல் காளியிடம் அனுதாபம் சுரந்தது. வழிப் பயணத்துக்குப் பேச்சு இருந்தால் தொலை-தூரம் தோன்றுதல்லவா? காளியின் வாயைக் கிளறிவிட்டால் ஒரு கால் அவனைப்பற்றி ஏதாகிலும் விருத்தாந்தம் புறப்படுமென்ற ஆவல் குமாரசாமிக்கு. மறுவிநாடி அவன் இதயசபலத்தைத் துழாவி யறிந்தவனாட்டம் காளியே முதலில் பேச வாய் தூக்கினான்.

"அண்ணாச்சி, என்ன இப்படி ஒண்டியாப் புறப்பட்டிங்க. ஆனா முடிச்சைப் பார்த்தாப் பெலமாக் கனக்குது. வேறு யாரும் உங்க சம்சாரம், பிள்ளை குட்டி யாராச்சும் வருவாங்களா? அல்லது முன்னாடியே போயாச்சா?"

இது காளியின் கேள்வி.

சற்றே மறந்திருந்த ஏதோ ஒன்றை அவன் நினைவு படுத்தி விட்டவன் போலக் கணநேரம் குமாரசாமி பேசாதிருந்தான்.

"காளி, எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே. ஆனா என் தங்

அட்டைப்படக் கதை

கச்சிக்கு முதலிலே கல்யாணம் கட்டினப்புறம்தான் என்னைப் பற்றி யோசிக்கவேணும். தங்கச்சியையும் அம்மாவையும் காலம் பற வண்டிக்கு ரயிலேற்றி விட்டேன். அவசரமா ஒரு காரியம் எனக்குத்தலைமேலேஇருந்துச்சு. அதாலே நான் அவங்களோடு போக வாய்க்கல்லே. எனக்காகக் காத்துக் கிட்டிருப்பாங்க. சொந்தக்காரங்க விட்டிலே ஒரு சடங்கு. அதுக்குத்தான் போறேன்" என்று குமாரசாமி கூறினன். 'ஊம்' கொட்டிக் கேட்டான் காளி.

குறுக்கிட்ட ஆற்று மணலைத் தாண்டிச் சென்ற சமயம், கூப்பிடு தூரத்தில் 'குபுகுபு' வென்று தீப்புகை மண்டலம் மேகத்தை எட்டிப் பிடிப்பது போன்று பாவி வந்ததைக் கண்ட குமாரசாமி வேடிக்கை மாதிரி அக்காட்சியைக் காளிக்குக்காண்பித்தான்.

"இதுக்கு இம்மாம் தெகப்புக் கொள்ளுறீங்களே. அஞ்சாறு வருசத்துக்கு முந்தி ஜப்பான்காரன் பர்மாவைக் குண்டுபோட்டுத் தீக்கிரையாக்கினதை நீங்க கண்ணுலே காணக்கூடத் துணிச்சல் படமாட்டிங்க போலே. ஹூம்; பாவிப்பய சண்டை வந்து......." என்று பேசிக்கொண்டு வந்த காளியின் குரலில் அளவிறந்த துயரம் தடம் பதிந்திருந்தது. இதை யுணர்ந்த குமாரசாமி கனிவுடன், பச்சாதாபத்தோடு காளியைப் பார்த்தான். அவன் கண்களினின்றும் அருவி சோர நீர்ச்சொட்டுகள் படிப்படியாக வழிந்து கொண்டிருந்தன.

"காளி"

"ஐயா, இருந்திருந்தாப் போல இப்படி என் கண் கலங்குதுன்னு தானே யோசனை பண்ணுறீங்க. வயிற்றுப் பிழைப்புக்காக நானும் என் தங்கச்சியும் கடல்கடந்து பர்மா தேசத்துக்குப் போனேம். பெற்றவுங்க எங்களை அனுதாவா விட்டுச் செத்துட்டாங்க. வேலை செஞ்சு பிழைச்சு அதிலே கிடைக்கும் வரும்படியைக் கொண்டு நானும் தங்கச்சியும் காலத்தைக் கடத்தினேம். இப்படி வருசம் ஒண்ணு தாண்டிப் போச்சு. அப்புறந்தான் சண்டை மூண்டு குண்டுவீச்சுத் தொடங்கியது. கடை அலுவலா அடுத்த வங்குசாலை வரை போயிட்டுத் திரும்பி வந்து பார்த்தேன். ஊரே நிர்த்தூளிப் பட்டுச்சு. பிணக்காடு கணக்கா பட்டணம் தோணுச்சு. உயிரு தத்தளிக்க, பதைச்ச நெஞ்சோடு என் கண்ணை எங்கெல்லாமோ தேடினேன்; அலசினேன், காணமுடியலை. அப்பவே என் ஜீவன் வடிஞ்சிருச்சு. உயிர் தப்பிச்ச இரண்டொரு பொங்கிச் சாமியார்களையும் விசாரிச்சுப் பார்த்தேன். தெரியாதுன்னுட்டாங்க. நடைப் பிணமாக நடந்து நம்ப மண்ணை மிதிச்சேன். சுற்றுவட்டாரத் திரு நாள் ஒண்ணு பாக்கி வைக்காம இன்னமும் தேடிக்கிட்டுத்தான் இருக்கேன். ஐயாவே, நீங்களும் ஒரு தங்கச்சியோடே பிறந்தவங்க தானுங்களே. என் ஆசைத் தங்கையை என் உயிர் இருக்கிறதுக்குள்ளே காணலாமா? காணக் கூடுமா?—" என்றான் காளி. அவன் பேச்சில் சொல்லுக்குப் புறம்பான சோகமிருந்தது; சஞ்சலமிருந்தது. ஆர்வமிருந்தது; ஆதரமிருந்தது!

குமாரசாமி காளியை நோக்கினுன். அவன் செயலிழந்த பாவையாக நின்றிருந்தான். விழிக்குழியில் புதைந்து கிடந்த கண்ணின் கருவிழிகள் அங்குமிங்கும் யாரையோ தேடியலைந்தன. அவன் தங்கையையா? 'சகோதரியை மீண்டும் பார்க்கலாமா' என்ற ஆசைக் கனவில் மிதந்த அவன் இமைப்பொழுது மலர்ச்சியடைந்தான். அதே நொடியில் 'இனி எப்படி, எங்கே அவளைக் காண இயலும்' என்ற நிலை ஏற்படவே மலர்ச்சி பெற்ற அவன் வாட்டமுற்றுன்; வாடிப்போனுன்.

சாலை எல்லையை மிதிக்கும் வரை இருவரும் மோன நிலையில் வழி நடந்தனர். ஊரை அடைந்தவுடன் குமாரசாமி சில்லரையை எண்ணி எட்டு அணு காளிக்குக் கொடுத்தான். காளி சிரித்தான்; பலமாகச் சிரித்துக்கொட்டினுன். ஊழிக்கூத்தில் பிரமன் உதிர்த்த பேய்ச் சிரிப்புக் கணக்கில்—! அவன் சிரிப்பில் இதய அந்தரங்க எண்ணங்கள் பூராவும் அலைபாய்ந்து மேல் பூச்சாகி எதிரொலிப்பது போன்று குமாரசாமி நினைத்துக் கொண்டான்.

"பாவம் பைத்தியம் போல."

குமாரசாமி இரக்கங் காட்டினுன். காளி அப்படியென்றுல் பைத்தியமா? யார்சொன்னுர்கள்?

"ஐயா, காசு பணத்துக்கு என்னுங்க. உங்க மாதிரி நல்ல மனுசங்கதான் எனக்குப் பெரிசு. எனக்கு என் தங்கச்சிப் பொண்ணு கிடைக்குங்களா?" என்று கூறி, அவன் தங்கியுள்ள வீட்டைக் கேட்டுக்கொண்டு காளி விடை பெற்றுக் கொண்டான்.

அடுத்த நாள்.

மத்தியானம் கடைத் தெருப் பக்கம் குமாரசாமி சென்றிருந்தான்; சடங்கு விசேஷம் முடிந்ததால் ஊருக்குப் புறப்படச் சாமான்கள் வாங்கிவரப் போயிருந்தான் அவன்.

வீட்டின் தாழ்வாரத்தில் கைகளால் முகத்தை ஏற்றபடி உட்கார்ந்திருந்தாள் அவன் தங்கை. சீவி முடித்திருந்தாள்; புது ஆடை உடுத்தியிருந்தாள். அழகான முகம் பொலிவுடன் விளங்கியது.

"குமாரசாமி ஐயா இருக்காங்களா" என்று கேட்டுக்கொண்டு காளி முன்னே வரலானுன். திரும்பவும் ரயிலடிக்குப் போக ஏதாவது 'சான்ஸ்' தட்டலாமல்லவா?

உட்கார்ந்திருந்த அப்பெண்ணை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். யாருடைய முகம் அது? காளி பின்னும் ஓர் அடி முன் எடுத்து வைத்து, அந்த யுவதியை நோக்கினுன்.

"நெசமாவே நம்ப தங்கச்சியே தானு இது?—"

கனவின் தொடுகோட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவனுக்குச் சுயநினைவுமுடுக்கப்பட்டதும், அடுத்தும் ஒருதரம் அவளைப் பார்த்தான்.

தன் தங்கச்சியைப் போன்ற அதே சாயல்—அதே முகம்; அதே பார்வை. அப்படி யென்றுல் அவள்தான் அவன் தங்கையா?

அவன் தங்கச்சியை அப்படியே உரித்து வைத்திருந்தது போலிருந்தது அப் பெண்ணின் உருவம். ஆனுல் தன் தங்கச்சி மண்ணுகி விட்டிருப்பாள் என்பதை

யும் காளி அவ்வப்போது உணரா தில்லை. என்றாலும் சபலம்— பாசம் அவனை ஆட்டிப்படைத் தது, ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே உளர்?

இனம் விளங்காத பாந்தவ்யம், சிதைந்த எண்ணக் கலவை யின் பிரதிபலிப்பென அந் தப் பெண்மீது கனிந்தது காளிக்கு. அவள் அவனுள் இடம் பெற்றாள்.

'தங்கச்சி'—

அழைத்த மனம் மணம் பெற் றது; உள்ளம் மலர்ந்தது; உடல் சிலிர்த்தது. காளி பரவசமடைந் தான். நரம்புக்கு நரம்பு புத்துயிர் ஊர்ந்து கிளர்ந்தது.

தங்கச்சி என்ற பாசத்தின் பிணைப்புடன், துல்லிய அன் போடு அந்தப் பெண்ணை இமை கொட்டாது பார்த்து நின்ற காளிக்கு இவ்வுலக எண்ணமே கிடையாது போலும்! அவன் தன்னையும் மறந்து சிரித்தான். ஆமாம்; அவள் உருவிலே அவன் தன் சொந்தத் தங்கச்சி நடமாடு வதை, அழகு காட்டி விளையாடு வதைக் கண்மூடாமல் பார்த்து நின்றான்!

குமாரசாமி கையில் பழங்க ளுடன் பிரவேசித்தான். வழியில் நின்ற காளியைக் கண்டுவிட்டு, "காளி வாப்பா" என்று முக மன் கூறினான். காளி அப்போது தான் உணர்வு பெற்றான்.

தலைவன் வந்ததும் ஒதுங்கி நின்ற அப்பெண் சாமான்களை உள்ளெடுத்துப் போனாள்.

"ஐயா, கொஞ்சம் தாகத் துக்கு வேணும்" என்றான் காளி.

உண்மையில் அவனுக்குத் தாக மில்லை. ஆனால் அவள் கையால் ஒரு மிடறு தண்ணீரே னும் அருந்த வேண்டுமென் றிருந்தது அவ னுக்கு. தண் ணீர் செம்பில் கொணர்ந் தாள் மங்கை.

அவள் நீட் டிய செம் பைக் கை நீட்டி வாங் கின காளியின் விரல்கள் அவ ளது பூங்கரங் களைத் தீண் டின. அவன் புளகித்தான்; பூரித்தான்; பாசவெள்ளம்

கரைபுரண்டது. தன் தங்கச்சியுடன் கழித்த ‘அந்த நாட்கள்’ மனதில்நிழலாடின. அவன் அவளை உவகையுடன் திருஷ்டி செலுத்தினான். ஆனால் பதிலுக்கு அவள் விழித்த நோக்கிலே ஏன் இத்தகைய புயல்? சூறாவளி?

துவண்டு மறையும் மின்னலென அவள் மறைந்தாள்.

“அண்ணாச்சி”

ஏக காலத்தில் குமாரசாமியும் காளியும் திரும்பினார்கள். குமாரசாமி மட்டுமே உள்ளே நுழைந்தான். காளி ஏக்கமுற்றுச் சிலையானான்.

‘தங்கச்சி’

காளி மனதிற்குள் அழைத்துக்கொண்டான். அவள் நிலைப்படியைத் தாண்டி நின்றான்; சேலை தரையில் மிதந்து கிடந்தது. பார்வையைத் திசை விலக்கி விட்டான்.

“அண்ணாச்சி, யாரு அந்த மனுசன். அப்பவே தொட்டு என்னையே விழுங்கிப் பிடுகிறவர் கணக்காப்பார்த்துக்கிட்டே இருக்காரு. அந்த ஆளு பைத்தியமாங் காட்டியும்—!”

அந்த வார்த்தைகள் காளிக்குத் தெளிவாகக் கேட்டன. அந்தப் பெண்தான் பேசினாள்.

‘சுரீர், சுரீர்’ என்று அவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய அம்பாகப் பாய்ந்தன அவன் உடல், உள்ளம் இரண்டிலுமாக. எய்தவனிருக்க அம்பை நோவதா? அம்பை—சொல் அம்பை எய்தது அந்தத் ‘தங்கச்சி’ யாயிற்றே? உடன் பிறக்கா விட்டாலும் உடன் பிறந்ததாகப் பாசம் சொரிந்தானே அவன்?

காளி அன்பு காட்டினான். அவளோ பழி காட்டிவிட்டாள். பேதை! அன்பும் பழியும் துருவங்களின் இருமாறுபட்ட புள்ளி மையங்களல்லவா? இந்த இரண்டு உள்ளங்களும் எங்ஙனம் ஒன்று சேர முடியும்? அவன் பிணைத்து இணைக்கப் பார்த்தான். அவள் அபவாதம் சொல்லிவிட்டாளே! எண்ணெயும் தண்ணீரும் ஒன்று கலக்க முடியுமா, என்ன?

அந்த யுவதி எய்த அம்பு காளியைத் துளைத்துக் கொண்டிருந்தது. புண் ரணமாகிற்று. கணத்தில் மீண்டும் அம்பு வீச்சு. ‘ஐயையோ!’ அவன் துடித்தான், கரையில் வீசியெறிந்த மீனைப் போல.

‘தங்கச்சி’

கண்ணீர் வெள்ளம்; வெந்து புரையோடிய நெஞ்சு, உயிர் ஊசலாடிய உடல்; இந்நிலையிலும்

காளி அவளை மறக்கவில்லை.

துள்ளியோடும் ஆற்று நீரின் மேல் பரப்பு அழகாக—சலன மற்றுத்தானே தோன்று கின்றது. ஆனால் நீரின் அடிப் பரப்பிலே சுழுத்தோடும் சுழல் யாருக்குப் புலப்படும்?

மனம் ஒரு குழந்தை; எடுப் பார் கைப்பிள்ளை. எடுப்பவர்கள் குழந்தை வசம் மனமிழக்கலாம். அதே சமயம் குழந்தை எடுப்ப வரைப்பற்றி எந்நிலையில் தீர்ப்பு நிர்ணயம் செய்கிறதோ? யார் அறிவார்கள்? காளியின் மனமும் அப்படித்தான்! அவன் அந்தப் பெண்ணைத் தங்கையாக மதித் தான். தன் சொந்தச் சகோதரி யைப்போலவே, ஒரே தினுசாக —அசல் அவளை மாதிரி காணப் பட்ட அந்தச் சிறுமியின் சூழ் நிலையிலேயே இருந்து, ஏதேனும் குற்றேவல் புரிந்து வாழ்வின் எஞ்சும் நாட்களைக் கழித்து விடலாமென்று கனவு கண்டான் காளி. இது குறித்துக்குமாரசாமி யிடம் பேச்செடுக்கவுமிருந்தான் அவன். ஆனால் அந்தப் பழி! காளி பாவமறியாதவன். பழி சுமத்தப்பட்டான், பாவம்!

காளி கனவிற்கும் கனவின் விழிப்பிற்கும் ஊடே அல்லாடி னான். விழிப்பு அவனது கண்களை வழி திறந்தது.

அதே கணம் அவ்வீட்டை விட்டு வெளியேறினான். நீர் முட்டிய கண்களால் உலகத்தைத் துழாவினான். காளிக்கு உலகம் இதய மற்றதாகப் பட்டது; பாச மற்றதாகப்பட்டது; அவிழ்க்கக் கூடாத விடுகதையாகப்பட்டது. உள்ளத்தில் என்றும் பசுமை யுடன் சிலையோடியிருந்த தன் ஆவித் தங்கையை—அடுத்து அதே ஸ்தானத்தில் தங்கச்சி யென மதித்த அந்தப்பெண்ணை- அப்புறம் அவள் உண்டாக்கி விட்ட ஆறாத புண்ணை—ஆகிய இவற்றைச் சுமந்தவாறு அவன் கால்கள் இழுத்த திக்கில் நடக்க ஆரம்பித்தான். நடந்தான், நடந்து கொண்டேயிருந்தான். வர வர அவனுடைய நேத்திரங் களின் கூட்டுறவில் உலகம் சூன்ய மாகிக் கொண்டே வந்தது! உலகம் பொல்லாதது!

பொன்னி

சந்தா விவரம்

	ஒரு ஆண்டு	ஆறுமாதம்
இந்தியா, இலங்கை	ரூ. 6–0–0	ரூ. 3–0–0
பர்மா, மலேயா, முதலிய வெளிநாடுகள்	ரூ. 6–12–0	ரூ. 3-6-0

சந்தாத் தொகை முன்பணமாகவே செலுத்தப்பட வேண்டும். இலங்கை நண்பர்கள் வி. பி. பி. மூலம் தபால் செலவுடன் தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பொறுப்பாளர்.

சிறுவர் அரங்கம் — பொன்னி

சர்க்கஸ் ரங்கு

டி. ஜே. இன்பராஜ்

ரங்கநாதன் தூங்கிக்கொண்டிருந்தான்.

"டேய் ரங்கு, இன்னும் என்னடா தூக்கம்?" என்று அவன் அம்மா அவனை எழுப்பினாள்.

ரங்கு எழுந்து உட்கார்ந்தான். கைகளை முறுக்கிக் கொட்டாவி விட்டான். ஜன்னலின் வழியாக வெயில் "சுள்"ளென்று அவன் முகத்தில் பட்டது.

"அடடே, பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டதே" என்று முணு முணுத்துக்கொண்டு அவன் பல் துலக்க ஓடினான்.

ரங்குவிற்கு அப்பா இல்லை. அவன் குழந்தையாய் இருக்கும் பொழுதே அவர் இறந்துவிட்டார். அவன் அம்மாதான் அவனை வளர்த்தாள். மிகவும் செல்லமாக வளர்த்தாள். ரங்கு ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான்.

ரங்கு சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பிவிட்டான். ஒரு கையில் புத்தகப்பை. மறுகையில் சோற்று மூட்டை. ரங்குவினுடைய ஊர் சிறிய கிராமமானதால் அங்கு பள்ளிக்கூடமில்லை. இரண்டு மைல் தூரத்திலுள்ள பட்டணத்தில் தான் பள்ளிக்கூடமிருந்தது. அதில்தான் ரங்கு படித்தான்.

சாயங்காலம் நாலரை மணிக்குப் பள்ளிக்கூடம் முடியும். ரங்கு வழியெல்லாம் விளையாடிக்கொண்டே வருவான். எப்படியும் இருட்டுவதற்குள் வீட்டிற்கு வந்துவிடுவான்.

அந்த வருஷம் ரங்கு ஐந்தாம் வகுப்பில் தேறிவிட்டான். ஆறாம் வகுப்பில் போய் "ஜம்"மென்று உட்கார்ந்தான். ஆனால் மூன்று மாதங்கள்தான் படித்தான். அவன் நிறையப் புத்தகங்களும் நோட்டுகளும் வாங்கவேண்டும். சம்பளம் வேறு கட்ட வேண்டும். அவன் அம்மாவிடம் பணமில்லை.

ரங்குவின் அப்பா இறக்கும்பொழுது, ஒரு சிறிய வீடும், கொஞ்சம் பணமும்தான் இருந்தது. இவ்வளவு காலத்தில் அந்தப் பணமும் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவாகிவிட்டது. குடியிருக்கும் வீடு மட்டும்தான் இருந்தது.

ரங்குவின் அம்மா என்ன செய்வாள்? பணமில்லாததால் ரங்கு பள்ளிக்கூடத்திலிருந்து நின்றுவிட்டான். இருவருடைய சாப்பாட்டிற்கும் என்ன செய்வது? அவன் அம்மா யோசித்தாள். பலகாரம் செய்து விற்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

ரங்குவின் அம்மா உளுந்து வாங்கிவந்து வடை செய்தாள். ரங்கு அம்மாவிற்கு உதவி செய்தான். வடைகள் தட்டு நிறையக் குவிந்துவிட்டன. ரங்கு தட்டைத் தலையில் வைத்துக்கொண்டு கிளம்பினான். பட்டணத்தில் விற்று வருவதற்குத்தான்.

அவனுக்கு ஒரே உற்சாகமாக இருந்தது. சீட்டியடித்தான். வடை விற்றுப் பணம் சம்பாதிப்பதை நினைத்தவுடன் அவனுக்குக் குஷி கிளம்பிவிட்டது. "பாவம் அம்மா கஷ்டப்படாமலிருக்க இதாவது செய்கிறேமே" என்ற எண்ணம் அவன் மனத்திற்குச் சாந்தியைக் கொடுத்தது.

திடீரென்று அவன் பாட ஆரம்பித்தான்.

"உளுந்தில் சுட்ட வடை
உடலுக் கேற்ற வடை
உடனே காசு கொடுத்தால்
உனக்கும் ஒன்று தருவேன்"

"களுக்"கென்று அவன் சிரித்துக்கொண்டான். "பாட்டு பரவாயில்லையே. இனிமேல் பாட்டுப்பாடிக்கொண்டுதான் வடை விற்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு, வேகமாக நடந்தான்.

ரங்கு வடைத் தட்டுடன் பள்ளிக்கூடத்திற்கு முன்னல் வந்து நின்ருன். மணி பதினென்றே முக்கால். இன்னும் கால் மணி நேரத்தில் பையன்கள் வெளியே வந்துவிடுவார்கள்.

"சீனி போட்ட வடை
சீரகம் போட்ட வடை
தின்னத் தின்ன ருசிக்கும்
திரும்பி வந்தால் இல்லை"

ரங்கு சப்தம்போட்டுப் பாடினன். பள்ளிக்கூடத்தில் முதலில் இருந்த அறைதான் ஆரும் வகுப்பு. அவன் சப்தத்தைக் கேட்டுப் பையன்கள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தனர்.

"டேய், ரங்கு நிக்கிருன்டோய்!"

"ரங்கு நல்லாப் பாடருண்டா!"

"தட்டு நிறைய வடை இருக்குடா!"

பையன்கள் போட்ட சப்தத்தைக் கேட்டு "அடே, அங்கே என்ன சப்தம்?" என்று உபாத்தியாயர் அதட்டினர். பையன்கள் கம்

மென்று இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களுடைய கவனம் பாடத்தில் செல்லவில்லை. எப்பொழுது மணி அடிக்குமென்று காத்திருந்தார்கள்.

மணி அடித்தது. எல்லோரும் "ஓ" வென்ற இரைச்சலுடன் வகுப்பை விட்டு வெளியே ஓடினர்கள்.

"ரங்கு, எனக்கொரு வடை கொடு"

"அந்த வடையை எனக்குக் கொடு"

"எனக்கு இரண்டு வடை வேண்டும்"

எல்லோரும் ரங்குவைச் சூழ்ந்துகொண்டு வடை கேட்க ஆரம்பித்தனர். கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு ரங்கு திண்டாடினுன். பையன்களைக் கொஞ்சம் விலகி நிற்கச் சொன்னுன். பையன்கள் விலகினர்கள்.

"அம்மா சுட்ட வடை
சும்மா தருவேனே
பணத்தை முதலில் கொடுத்தால்
பலகாரம் உடனே கிடைக்கும்."

ரங்குவின் பாட்டைக் கேட்டு, ஒவ்வொருவரும் காசை எடுத்து நீட்டினர். ரங்கு காசை வாங்கிக்கொண்டு "மள, மள"வென்று வடைகளை எடுத்துக் கொடுத்தான். இரண்டு நிமிஷங்களில் வடைத் தட்டு காலி.

"ரங்கு, எனக்கு வடை இல்லையா?" என்ருன் கோபு.

"ஏண்டா, கொஞ்சமாக் கொண்டு வந்தே" என்ருன் சோமு.

"நாளைக்கு நிறையக் கொண்டுவா" என்ருன் பாலன்.

"கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ரங்கு குதித்தோடினுன். அத்தனை வடைகளையும் ஒரு நொடியில் விற்றுவிட்ட சந்தோஷம்!

வடை வியாபாரம் தினமும் ஒழுங்காக நடந்துகொண்டிருந்தது.

[தொடரும்]

பழி

சுலோசனா

உதிர்ந்து கிடந்த நாவற் பழங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள் வள்ளி. அவளது அழகிய முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. குறுகுறு வென்றிருந்த கரிய விழிகளிலே குதூகலம்! அள்ளி முடியப் பட்டிருந்த கருங்கூந்தவில் மின்னிக் கொண்டிருந்த மல்லிகை மலர்கள் கூடச் சிரித்துக் கொண்டிருந்தன! அவளது இடது கையிலே கூடை. பொறுக்கிய பழங்களை அதில் போட்டுக் கொண்டிருந்தாள் அவள். வள்ளி 'பண்ணையார்' முருகேசனின் ஒரே மகள். முருகேசனுக்குப் 'பண்ணையார்' என்பது 'கௌரவப் பெயர்' பரம்பரையாக இருந்து வந்த கௌரவப் பெயரைத் தள்ளிப் போட்டு விடக் கூடாதே யென்று தான் இன்னமும் அவனை ஊரார் 'பண்ணையார்' என்று அழைத்தனர். முருகேசனின் பூட்டனார் அவ்வூரில் ஒரு 'அரசனை'ப்போல் விளங்கியவர். அவரது குடும்பம் என்றால் ஊரார்-சுற்று வட்டத்தார்கூட-நடுங்குவர். ஆனால் அத்தகைய கௌரவம் வாய்ந்த குடும்பத்தை மதிக்காமலிருந்தது வேறோர் குடும்பம், அதுதான் 'மாணிக்க மணியக்காரர்' குடும்பம். மணியக்காரரும் பண்ணையாரும் 'பரம' விரோதிகள். என்ன நடந்த தென்றால், முடிவில் பண்ணையாரை மணியக்காரர் கொன்று விட்டார்! பண்ணையாரின் மூத்த மகன் மணியக்காரரைக் கொன்று பழியைத் தீர்த்துக் கொண்டான்! அதன் பிறகு அது 'நித்ய குடும்பப்' பகையாகவே மாறிவிட்டது. முருகேசனின் தந்தை காலத்தில் மணியக்காரரின் பேரன் அவ்வூரை விட்டே கிளம்பி எங்கோ போய் விட்டான்! அதன் பிறகுதான் 'பண்ணையார்-மணியக்காரர் வழக்கு' அடியோடு ஒழிந்தது! முருகேசனின் காலத்தில் ஒற்றுமை நிலவியது. பரம்பரைச் செல்வத்தை முருகேசன் இழந்து விட்டானெனினும் கௌரவத்தை இழக்க வில்லை. அவன் குடியானவன்—நல்ல உழைப்பாளி. வள்ளி அவனது ஒரே மகள்.

ஒரு பலத்த காற்று வீசியதால் 'பொல பொல' வென்று உதிர்ந்தன நாவற் பழங்கள். துள்ளியோடும் இளமானைப் போல் ஓடியோடிப் பொறுக்கினாள் வள்ளி... ...உள்ளத்தில் ஒரே குதூகலம்!

"இத்தனையும் காற்றில் உதிர்ந்த பழங்களா?"

அந்தக் குரல் வள்ளியின் உடலை ஒரு உலுக்கு உலுக்கியது—சட்டென்று நிமிர்ந்து நோக்கினாள். வேலியின் வெளியே நின்று கொண்டிருந்த அழகிய இளைஞனின் உருவத்தைக் கன்னியின் கண்கள் விழுங்கின. நாகரிகத்தின் சின்னமாகிய அவன் அந்தக் கிராமப் பெண்ணின் பேதை மனதைக் குழையச் செய்து விட்டான்! அவளது முகம் நாணத்தால் சிவந்தது.

"இதெல்லாம உன்னுடையதா?

"உம்...எங்கப்பாவின் தோட்டம் தான் இது!"

"அப்படியா? அடேயப்பா, எவ்வளவு பழங்கள்! எனக்கு நாவற் பழங்களென்றால் ரொம்பப் பிடிக்கும்!"

அவனது கண்கள் தனது கையிலிருக்கும் கூடையை ஆவலோடு நோக்குவதைக் கண்டதும் வள்ளியின் மனம் ஏதோ ஒரு வித இன்ப உணர்ச்சியால் துடித்தது...மெதுவாக ஊர்ந்து அவனருகில் சென்றாள். அவன் வெளியே—அவள் உள்ளே! வேலி இருவரையும் பிரித்தது!

"உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்!"

வள்ளி கூடையை அவனிடம் நீட்டினாள். அவன் புன்னகையோடு கையிட்டுப் பழங்களைப் பொறுக்கினான். வள்ளியின் கவிழ்ந்த கண்கள் அவனது கரத்தை உற்று நோக்கின. வைர மோதிரம் 'டால்' வீசிக் கொண்டிருந்தது...

"நீ தினமும் பழம் பொறுக்க இங்கே வருவாயா?"

"வருவேன்—ஏன்?"

"இல்லை—அப்படியானால் நானும் வருகிறேன். தினமும் எனக்கும் கொஞ்சம் கொடுக்க வேண்டும்!"

வள்ளியின் பெண் மனம் படபடத்தது. அவனது வேண்டு



டாக்டர்: ஒன்றுமில்லையம்மா, எல்லாம் இந்தத் தேர்தல் ஜுரம்தான்! கவலைப் படாதிங்க, கொஞ்ச நாளில் சரியாய்ப் போய்விடும்.

கோள் மின்சாரம் போல் அவளைத் தாக்கி இன்பத்தை ஏற்றி விட்டது! நிமிர்ந்து ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள். அவன் அழகாகப் புன்னகை புரிந்தான்—கண் சிமிட்டினான். பிறகு சென்று விட்டான்!

அவன் யாரோ...? ஆனால் அன்றிரவெல்லாம் அவனைப் பற்றியே இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள் வள்ளி!

மறு நாள்—வள்ளி தோட்டத்தில் அவனைச் சந்தித்தாள். ஆனால் அன்று அவனே வேலி தாண்டி உள்ளேயே புகுந்து விட்டான்! வள்ளியோடு சேர்ந்து நாவற்பழம் பொறுக்கினான்—தானும் நிறையத் தின்று கொண்டான்! இருவரும் அதிகமாகப் பேசிக் கொள்ளவில்லை. ஊருக்கே புதியவனான அந்த இளைஞனைப் பற்றி 'நிறைய' அறிந்து கொள்ள வள்ளி ஆசைப்பட்டாள் ஆனால் கேட்பதற்கோ வெட்கம்! உள்ளத்தில் மட்டும் விவரிக்க இயலாத ஒரு இன்பத் துடிப்பு...! அன்று எப்படியோ கழிந்து விட்டது. அதற்கு மறு நாளும் அதே போலச் சந்திப்பு...

மூன்றாவது நாள்—வள்ளியோடு அவளது தந்தை முருகேசனும் தோட்டத்திற்கு வந்து விட்டான்! வள்ளியின் உள்ளம் குழுறியது. அப்பா இருப்பதால் 'அவன்' வரமாட்டானே யென்ற துயரம்! அவள் பல்லைக் கடித்தாள்—ஆனால் என்ன பலன்?...

முருகேசனைக் கண்டு கொண்ட 'அந்த' இளைஞன் வெகு சாமர்த்தியமாக 'ஒன்றுமறியாதவன்' போல் அப்பாற் போய் விட்டான்!

"வள்ளி! அதோ போகிறானே ஒருவன் அவன் யாரென்று தெரியுமா?" என்று முருகேசன் திடீரென்று பேசியதும் வள்ளியின் நெஞ்சம் திக்கென்றது...முகத்தில் வியர்வை அரும்பியது...

முருகேசன் தொடர்ந்தான். "நம்ம 'மணியக்காரனின்' பூட்டப் பிள்ளை வேலாயுத மாக்கும்! இவன் அப்பன் சிங்கப்பூருக்குப் போய் நிறையச் சம்பாதித்தான், பையனைப் பட்டணத்திலே படிக்க வச்சானாம். பழைய வளக்கைத் திரும்பவும் கிளறிவிடணும்னு இவன் அப்பனுக்கு ரொம்ப ஆசை! காவாலிப்பய கொணம் விட்டுடுமா சும்மா? நம்ப ஊருக்கு மேற்கே நிறைய நிலமும் தோப்பும் வாங்கியிருக்கான்! பையனையும் இனிமே இங்கே தான் குடிவைக்கப் போறதாகக் கேள்வி"

வள்ளியின் கண்ணிமைகள்

விரிந்தன. மூச்சு வேகமாக வந்தது அவள் மனதைக் கொள்ளை கொண்ட இளைஞன் மாணிக்க மணியக் காரரின் பூட்டப் பிள்ளையாம்...! அவனுடைய அப்பாவும் தன்னுடைய அப்பாவும் ஜன்மப் பகைவர்களாச்சுதே! அப்படியானால்...

தந்தையின் குரல் அவள் சிந்தனையைக் கலைத்தது. "நீ இந்தப் பக்கம் பழம் பொறுக்க வரச்சே, அந்தப் பயலை அக்கம் பக்கம் பார்த்தால் காறி உமிழ்ந்து விடு; தெரிஞ்சுதா வள்ளி? பயபொல்லாதவன்! உங்கிட்டே எதினுச்சிலும் பேச வந்தானானல் அப்படியே மூஞ்சியிலடித்தப்போலே பேசி விரட்டிப்புடணும்! அப்பனைப்போல இவனும் நடந்துகிட்டானானா வெட்டிப் பிளந்துடுவேன் பிளந்து!"

முருகேசனின் மீசை பகைமையின் வெறியால் துடித்தது...

'மணியக்காரன்' என்று உச்சரிக்கக் கூடத் தன் தந்தைக்கு எவ்வளவு வெறுப்பாகப் படுகிறதென்று நினைக்கையில் வள்ளிக்குக் கண்ணீர் வந்துவிட்டது! அந்த இளைஞனைப் பார்த்தால் 'காறி உமிழ' வேண்டுமென்று அப்பா சொல்கிறார்! தானோ கடந்த மூன்று நாட்களாக அவனுடன் அன்பு ததும்ப உரையாடியதுமின்றி, நாவற்பழங்களும் கொடுத்து......ஏன்? அவனைத் தன் உள்ளமாகிய இல்லத்தில் குடியேற்றியாயிற்று! வள்ளி மௌனமாகக் கண்ணீருகுத்தாள்!

○

"வள்ளி!"

வேலாயுதத்தின் குரல! வேலியின் புறத்தே நின்று அவளைக் கூப்பிட்டான்! 'பழம்பொறுக்கும் மங்கை' நாணத்தோடு நிமிர்ந்து தனது அழகிய விழிகளால் அவனைக் கடாட்சித்தாள்! நெஞ்சு படபடத்தது. "முகத்திலறைந்தாற்போல் பேசி விரட்டு....." என்ற தந்தையின் முரட்டுக்குரல் அவள் நெஞ்சில் எதிரொலித்தது. தயக்கத்தோடு அவனை நோக்கினாள். "போய்விடுங்கள்; அப்பாவின் ஜன்மப் பகைவரின் மகன் தாங்கள்!" என்று சொல்ல அவள் எவ்விதம் துணிவாள்...!

அவன் உள்ளே வந்தான்—

அவள் பழங்கள் கொடுத்தாள். சிரித்துச் சிரித்துப் பேசினான் அவன். அதை மதுவுண்ட வண்டைப் போல் கேட்டனுபவித்தாள் வள்ளி!

"உங்க தோட்டத்தில் நாவல் பழமில்லேன்னு எங்க தோட்டத்துக்கு வரீங்க..?" "எங்கள் தோட்டத்தில் ஏதோ கொஞ்சம் உண்டு. என்ன வந்தாலும் உன்னுடைய பழங்களுக்கு ஈடாகுமா அவை?"

"ஏன் அப்படி?"

"ஏனா? உனது மலர்க்கையால் வாங்கிப் புசிப்பதினால் ஒரு 'தனிருசி' ஏற்பட்டிருக்கலாம்?"

"கேலி பண்றீங்க! இல்லியா?"

இப்படியே வேடிக்கையும் உல்லாசமுமான உரையாடல்கள்! வேலாயுதத்தின் ஒவ்வோர் சொல்லையும் தேன் துளியாகக் கருதினாள் பேதை! அவனுடைய ஸ்பரிசத்தில் கிடைக்கப் பெறாத இன்பம் பொதிந்து கிடக்கின்றதாக எண்ணினாள்!

வள்ளி—வேலாயுதம்! இருவருடைய 'அன்பும்' வளர்ந்து எல்லையைக் கூடத் தாண்டிவிட்டது! அதே சமயம் முருகேசன்-மணியக்காரன் 'பகைமை'யும் வளர்ந்து எல்லையைத் தாண்ட ஆரம்பித்துவிட்டது!

ஒரு நாள் சந்தைப்புறத்தில் வேலாயுதத்தைக் கண்டவுடன், நேரிடையாகப் பலரும் கேட்கும்படி அவனைக் கேலி செய்துவிட்டான் முரட்டு முருகேசன். அவனுடைய நாகரிக வாழ்க்கையைப்பற்றித் 'தாறுமாறு'க் கிண்டல் செய்தான்! இது வேலாயுதத்திற்குப் பொறுக்கவில்லை! முருகேசனை அதே விடத்தில் எதிர்த்தான்! பேச்சு முற்றி 'அடிதடி'யில் முடிந்தது! கட்டுக்கடங்காக் காளைப் பருவத்தினனை வேலாயுதம், அவனை நன்றாக உதைத்து 'உப்புப்புளி' பார்த்துவிட்டான்!

இவ்விஷயம் வள்ளிக்குத் தெரியாது. அப்பொழுது அவள் தோட்டத்திலிருந்தாள். காவற் பழம் பெற்றுக் கொள்ள வேலாயுதம் வாராமலிருந்தது அவளுக்கு ஏமாற்றமாகவேயிருந்தது!

அன்று புதன்கிழமை—அதாவது முருகேசனுக்கும் வேலாயுதத்திற்கும் 'போர்' நடந்ததற்கு மறுநாள்—வள்ளி வழக்கம் போல் தோட்டத்திற்குச் சென்றிருந்தாள்... சில நாட்களாக ஒரு விதப் புது உணர்ச்சியால் அழகுறப் பிரகாசித்த அவளது செந்தாமரை போன்ற முகம் சிறிது வாட்டமடைந்து காணப்பட்டது. காதலின் தாபத்தால் ஜ்வலித்துக் 'குளு குளு'வென்றிருந்த கெண்டைவிழிகளில் நீர் தேங்கி நின்றது. அடர்ந்து கறுத்த அழகிய கூந்தல் பிரிந்து முதுகில் புரண்டு கொண்டிருந்தது...தன் காதலனுக்கும் தந்தைக்கும் நடந்த சண்டையை அவள் முற்றிலும் அறிந்து கொள்ளாவிட்டாலும் 'ஏதோ கொஞ்சம்' தெரிந்திருந்தாள். அது அவள் மனதை வாள்கொண்டு அறுப்பதுபோல் அறுத்துக்கொண்டிருந்தது ...... தனது தந்தையின் சிவந்த கண்களில் மின்னிட்ட பகை வெறியைக் கவனித்த அவள் நடுங்கினாள். கொலை செய்ய ஆயத்தமாக விருக்கும் கொலையாளியைப் போல் அவளுக்கு அவன் காட்சியளித்தான்! இந்த நிலையில் தனக்கும் வேலாயுதத்திற்கு மிடையே நடக்கும் 'காதல் நாடகத்தை' அவன் அறிந்துகொள்ள நேரிட்டுவிட்டால்......?

வள்ளி நடுங்கினாள். கரத்திலிருந்த பழக்கூடை கவிழ்ந்து பழமெல்லாம் நாற்புறமும் சிதறின...

"ஐயைய்யோ, பழத்தை யெல்லாம் கீழே கொட்டி விட்டாயே...!"

அவளது காதலனின் குரல் தான்! அவனுடைய அணைப்பில் சிக்குண்டு கண்ணீரைப் பாய்ச்சினாள் வள்ளி. அவளது துயரத்தை மாற்றினான் வேலாயுதம்-ஆமாம்; அன்று அவளை இன்பத்தின் சிகரத்திற்கே அழைத்துச் சென்று விட்டான்!

லேசாக இருள் படர்ந்து வரும் வேளை—நெஞ்சுப்பாரம் நீங்கியவளாய்—வீட்டை நோக்கி நடந்தாள் வள்ளி....வீடு நெருங்கியது. வாயிற் படியில் காலை வைத்ததும் உள்ளேயிருந்து வெடித்துக்

கிளம்பிய பேச்சுக்குரல் அவளை அங்கேயே சிலையாக்கி விட்டது.......!

"அற்ப நாய்! சின்னப்பயல்! அவனைச் சும்மா விடுவதா........? நாளைக்குக் காலையில் வளக்கம் போல அவன் வாய்க்காப்பக்கம் போவானில்லே, அப்பே பாத்து நான் போய் இந்த அரி வாளால் ஒரே வெட்டாய் வெட்டிப் போடாட்டி நான் 'பண்ணை யார்' அல்ல!"

முருகேசனின், முரட்டுக் குரல்....தன் மனைவியிடம் 'சபதம்' செய்துகொண்டிருந்தான் அவன்.........

வள்ளியின் நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. உடல் வெட வெட வென்று ஆடியது. உள்ளே செல்ல மனச் சாட்சி தடை செய்தது....சட்டென்று திரும்பினாள்—வந்த வழியே! 'விடு விடு'வென்று நடந்தாள்! அங்கே...? வேலாயுதம் வீட்டிற்கு!

"நாளைக்குக் காலையில் வாய்க்கால் பக்கம் போகாதீர்கள்! எங்கப்பா உங்களைக் கொல்வதற்கு அரிவாளோடு காத்து நிற்பாராம்!" என்று தன் ஆருயிர்க் காதலனை எச்சரிக்க வேண்டுமென்பதே அவளது தீர்மானம்! வேலாயுதத்தின் வீட்டிற்கு முன்பு அவள் சென்றதில்லை. ஆனால் வீடு எங்கேயிருக்கின்றதென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்! வள்ளி நடந்தாள்—விரைவாக நடந்தாள்! அந்த நடையில் தான் எத்தனை வேகம்! எத்தனை துடிப்பு! உள்ளம் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது! ஆர்வமும் ஆத்திரமும் அவளைப்பிடித்துத் தள்ளிக் கொண்டே சென்றன!

ஐந்து நிமிஷத்திற்குள் அவனது வீட்டையடைந்துவிட்டாள்! கதவு சாத்தியிருந்தது. ஆனால் ஜன்னலினூடே வெளிச்சம்வந்து கொண்டிருந்தது....மின்சாரம் பாய்வதுபோன்ற ஒரு உணர்ச்சி அவள் உடலைத் தாக்கியது....... அவளது தைரியமும் துணிச்சலும் அவளுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தன.

கதவைத் தட்டுவதற்கு அவள் மனம் ஒப்பவில்லை. துடித்துக் கொண்டிருந்த இதயத்தைக் கையால் அழுத்திக்கொண்டு ஜன்னலின் அருகே சென்றாள். மெதுவாக உள்ளே எட்டி நோக்கினாள்—குமுறிக்கொண்டிருந்த பெரும் இடி 'தொப்'பென்று அவள் தலையில் வீழ்ந்தது! உள்ளே அவள் கண்ட காட்சி தானென்ன?

சோபாவில் உல்லாசமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான் வேலாயுதம். அவனது முகம் மலர்ந்திருந்தது. மடியில் சாய்ந்த வண்ணம் அவனோடு கொஞ்சிக் கொண்டிருந்தாள் ஓர் அழகிய பெண்! அவனது— ஆமாம்; அவனது 'மனைவி'யே தான்....!

வள்ளியின் இதயம் அப்படியே வாய்க்குள் வந்துவிட்டது! தலை சுற்றியது. கண்கள் இருளடைந்து விட்டன ...!வியர்வைத் துளிகள் பெரிது பெரிதாக அரும்பின....உள்ளத்திலோ பெரும் புயல் வீசியது....தன்னையே காதலிக்கின்றான் எனக் கருதிய தன் காதலன் வேலாயுதம்தானா இவன்? தன்னை வஞ்சித்தானா?

தனக்குத் துரோகம் செய்தானு? சொன்னதெல்லாம் பொய்யா? பொய்தானு...? வேலாயுதமும் பொய் சொல்வானு....? பொய் சொல்லித்தானு தன் கற்பையே அழித்தான்....?

வள்ளி ஜன்னலே விட்டு அகன்ருள். இப்போது அவள் முகத்தில் வேருேர் ஒளி—அதுதான் வைராக்கியத்தின் சின்னமோ என்னவோ—பளிச்சிட்டது. அவளது முந்திய நடைக்கும் பிந்திய நடைக்கும்தான் எத்தனே வித்தியாசம்....!

ஆற்றை நோக்கி நடந்தாள் வள்ளி!

வேலாயுதத்தை அவள் எச்சரிக்கவில்லே. தான் சொல்ல வந்த காரியத்தை நிறைவேற்றவில்லே—மறுநாள் காலேயில் அவனேத் தன் தந்தை கொன்ருலும் கொல்லட்டும் என்ற எண்ணம்! கொல்வதே நியாயமானது என்ற வைராக்கியம்! அதுவே வேலாயுதத்தைப் பழிதீர்க்கத் தகுந்த முறை........

தன்னே—ஒரே மகளாகிய தன்னே—இழந்து தந்தை பரிதவிக்கட்டும்! அதுவே அவரைத் தீர்க்கும் பழி!

வள்ளி நடந்தாள்; நடந்து கொண்டேயிருந்தாள்........

அவளே வரவேற்பதுபோல் வெள்ளாறு 'சோ'வென்று இரைந்து கொண்டிருந்தது!



தமிழ் விருந்து

2. அந்த வெம்பசி எங்கே?

தமிழ்த்தும்பி

வியர்த்து விறுவிறுக்க அங்கு மிங்குமாக அலைகிறாள் அவள். அலைகடலின் ஆர்த்தெழும் அமைதியற்ற நிலைதான் அவள் மனநிலையை ஒத்திருந்தது. அவளுடைய உடலின் உறுப்புக்கள் எல்லாம் ஒரே பதட்ட நிலையைத் தான் காட்டின. கால்கள் விரைந்தன அந்த அறையின் இந்த மூலைக்கும் அந்த மூலைக்கும். கை விரல்கள் துடித்தன கடிதே அலுவலை முடித்து விடவேண்டும் என்று. உடலும் மனமும் தீவிரமாக ஈடுபட்டன அவள் தொடங்கிய காரியத்தை முடித்து வைக்க. எதிலும் ஒரு ஆவல் நிறைந்த ஆத்திரம் தான் காணப்பட்டது. வேலை மும்முரத்தில் கைவளை ஒலமிடுவதோ, காற்சிலம்பு புலம்புவதோ அவளுக்குத் தெரியவில்லை. அவசிய அவசரத்தைத் தடை செய்ய முற்பட்ட சேலையின் முன்தானையை வரிந்து கட்டிக்கொண்டாள் அவள். மீண்டும் உடம்பில் வேர்வை மழை கொட்ட, முகம் ஆர்வங்கொண்ட ஆத்திரத்தைக் காட்ட, கை கால் முதலியன "நான் முந்தி, நான் முந்தி" என்று வேலை செய்யப் போட்டியிட அவள் காரியமே கண்ணாக இருந்தாள்.

அப்படி அவள் என்னதான் செய்தாள்? ஒன்றுமில்லை. தன்னை மணந்த காதலருக்காகச் சோறு சமைக்கிறாள். அவர் உண்ணும் நேரம் அப்படியொன்றும் அண்மையிலில்லை. அவர் காலையுணவு அருந்தி ஒருமணி நேரம்தான் ஆகியிருக்கும். கொஞ்சம் காலந்தாழ்த்து அடிசில் தயாரித்தால் அவர் என்ன கோபக் கனலாகவா மாறிவிடப் போகிறார்? அப்படி ஒன்றும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. பின் ஏன் அவள் அப்படிப் பதறுகிறாள்? அவர் திரும்ப அடிசில் அருந்த வரும் நேரத்திற்குள் குறைந்தது மூன்று முறை அவள் சோறு சமைத்துவிடலாம்; பின் ஏன் அவள் அப்படித் துடிக்கிறாள்?

அவருடைய அன்புப் பார்வை ஒன்றை மட்டும்தான் அவள் அறிவாள். அவள் கண்ட அவர் நிலை ஒரே அன்புமயமானது. அவருடைய முகக்கண்ணாடி மூலம் அவர் உள்ளத்தை அவள் ஊடுருவி ஆராய்ந்தபோது கண்டுபிடித்தது அவர் உள்ளக்கரையை அரித்துக்கொண்டு அன்பு வெள்ளம் பாய்வதைத்தான். காட்டாறு போல் இன்று வெள்ளம் நிரம்பி நாளை வற்றிப்போகும் தன்மைத்தல்ல, அந்த அன்பு வெள்ளம். எப்போதும் அமைதியோடு ஓடி நன்மை பயக்கும் ஜீவநதிதான் அவருடைய அன்புக்கு உவமையாகும். அப்படிப்பட்ட அவருக்கு எப்படிக் கோபம் கொள்

147792

வது என்பதைச் சொல்லித்தர வேண்டியிருக்கும். இருந்தும் அவள் அவசரம் பதட்டத்தோடு கூடித்தானிருந்தது. ஏன்?

அவர் திரும்பி வந்து உணவுக்காகக் காத்திருப்பதா என்ற கேள்வியை அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அவருடைய வாழ்க்கையின் இன்றியமையா அலுவல்களுக்குக் குறுக்கேதான் தாமதம் என்ற முட்டுக்கட்டையைப் போடுவதா? உணவை உண்ணும் வேலைக்காகத் தான் அவரை வீட்டிலேயே சிறிது நேரம் நிறுத்தி வைத்துக் கொள்வதா? சாப்பிடுவதைவிட முக்கியமான, வாழ்வுக்குத் தேவையான பொருள் ஈட்டும் அவசிய அலுவல் அவருக்கு இல்லையா? ஆம். சாப்பாடும் வாழ்வுக்கு அவசியமானதுதான். ஆனால் அதைத் தான் முயன்றால் விரைந்து முடித்து விடலாம் அல்லவா? அவளுடைய சோம்பேறித் தனத்தின், அல்ல—கடமையை நிறைவேற்றச் சிறிது தாமதம் ஏற்பட்டதன்— காரணத்துக்காக அவர் காத்திருப்பதைப் பொறுக்காத அவள் அப்படி அவசரப் பட்டதில் அதிசயமில்லை!

நேரம் ஆகிக்கொண்டே வந்தது. அவளுக்குக் காலம் காற்று வேகத்தில் பறப்பது போலத் தோன்றியது. உண்மையில் சிறிது நேரம் தான் கழிந்திருந்தது. அச் சொற்ப நேரத்திற்குள் அவள் தன் கடமையை முடித்துவிட்டாள். உண்ணும் அறையில் எல்லாவற்றையும் வரிசையாக அடுக்கிவிட்டாள். ஒரே நறுமணம் எங்கும் பரவிற்று. இலை போட்டாகி விட்டது! தண்ணீர் தெளித்தாகிவிட்டது! அவர் வரவேண்டியது தான் பாக்கி! உடனே கரங்கள் பரிமாறும் உன்னத வேலையில் ஈடுபடும். ஆனால் அவர் அவள் நினைத்தபடி வந்து விடவில்லை. குறிப்பிட்ட நேரம் வந்தாலல்லவா அவர் வருவார்? அவளுக்கு இப்போது காலம் ஆமை நகருவது போலக் காட்சியளித்தது. ஏன் அவர் இன்னும் வீடு வந்து சேரவில்லை? நேரம் ஆகிவிட்டதே? அவர் வழிமேல் அவள் விழிகள் பதிந்தன. பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துவிட்டன. அவர் வருவதாயில்லை. அவளை ஏக்கம் வாட்டிற்று. உட்கார்ந்திருந்த நிலையில் அவள் கல்லாகச் சமைந்துவிட்டாள்.

* * *

"சோ" வென்று முழங்கிக் கொண்டிருந்ததுகடல். அதன் அலைகள் காதலருக்காகக் காத்திருக்கும் காதற்பெண்ணின் உள்ளத்து எண்ணங்கள் போல் உயர்ந்து தாழ்ந்தன. காதலியின் உள்ளத்தில் அமைதியின்மை! கடலிலும் அமைதியின்மை! கடற்கரையில் வெண்மையான நுரைகள் வந்து போயின. கடல் தன்னுள் அடக்கிக் கொண்ட செல்வங்களான முத்து, பவளம், சிப்பி முதலியவற்றை அலைகள் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தன. யாரோ சுமந்துவந்த தேங்காய்களை வழிப் பிள்ளையாருக்கு எவனோ ஒருவன் சமர்ப்பிப்பது போல, கடலின் உடைமைகளான அச் செல்வங்களை உலகத்தாருக்கு வழங்கிக் கொண்டிருந்தன அந்த நன்றிகெட்ட அலைகள்!

இமிழ் கடலின் இன்னிசையில் திளைத்தவளாய் அசையாது அமர்ந்திருந்தாள் ஒரு சிறுமி. அவளுடைய கால் விரல்களுக்கு இடுக்கில் ஏதோ தட்டுப்பட்டது. அசையாப் பதுமையாக இருந்த அவள் தட்டுப் பட்டது எதுவோ எனக் குனிந்து நோக்கினாள். அது ஒரு சிப்பி! அவளுக்கு அச்சிப்பி அடுப்பு போலக் காட்சியளித்தது. உடனே அவள் தான் அப்போதுதான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்த சமையற் கலையைத் துவக்கினாள்.

அண்மையில் ஒரு சிறுவன் மணலில் ஓடியாடிக் கொண்டிருந்தான். தன் இரு கரங்களாலும் அவன் அலை நீரைத் தெறித்துக் கொண்டிருந்தான். கடல் அவனுக்கு விளையாட்டுத் தோழன் என்பது தான் அவன் எண்ணம். மணலில் ஓடினால் சீக்கிரத்தில் பசிக்குமே என்பதை அவன் உணராமற் போகவில்லை. களிப்பு வெறி அவன் கருத்தைமறைத்துவிட்டது. அவன் இடைவிடாது ஆடினான், ஓடினான், எல்லாம் செய்தான்!

சிப்பியை அடுப்பாக அமைத்துக்கொண்ட அப் பெண் சமையல் தொழிலுக்கு வேண்டுவதான பாத்திரம், அரிசி, அனல் ஆகியவற்றைத் தேடுவதில் முனைந்தாள். வெண் சங்கு ஒன்று அவள் பார்வைக் கோணத்தில் அகப்பட்டது. அச்சங்கில் தீக்தேன் உலைபேற்றப்பட்டிருந்தது, அவளுடைய கருமமே கண்ணாயிருந்த நிலை அச்சங்கைச் சோறு ஆக்கும் பாத்திரமாகக் கொண்டது. அரிசி வேண்டுமே? என்ன செய்வாள்? அலை அவள் உதவிக்கு வந்தது. கரையில் ஒதுக்கப் பட்டிருந்த முத்துக்கள் அரிசியாகிவிட்டன அவளுக்கு. எல்லாம் கிடைத்துவிட்டன. தீ வேண்டும். என்னசெய்வாள்? பாவம். அவள் துடித்தாள் சமையலை முடித்துவிடவேண்டும் என்று. செந்தழல் போன்ற நிறத்தைக் கொண்ட பவளம் அவளுக்கு நெருப்பு போலக் காணப்பட்டது. வேலை மும்முரத்தில் சுற்றுப்புறம் மறந்து விட்டது அவளுக்கு. கடைசியாக அவள் சமையலும் முடிந்தது. ஆறுதலின் கோடுகள் அவள் முகத்தில் தோன்றலாயின.

"ஐயோ, பசி!" என்ற அலறல் அவள் ஆனந்தத்தையும் அதில் தோன்றிய அமைதியையும் குலைத்தது. அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். முன், மணலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் சோர்ந்து படுத்திருந்தான். வேறு யாருமில்லை, அப் பரந்த மணல்வெளியில்! ஆகவே அவன்தான் "ஐயோ, பசி" என்று கூவியிருக்கவேண்டும் என்று தீர்மானித்தாள் அவள். மறுபடி அவன் பேசலானான், "பெண்ணே, எனக்குத் தாங்க முடியாப் பசி! அடிவயிற்றை உருட்டுகிறது, உனக்குக் கோடி புண்ணியமுண்டு. கொஞ்சம் சோறு போடுவாயா!"

அவள் தான் தயாரித்திருந்த சோற்றைப் பரிமாறினாள் அவனுக்கு. "பசி பறக்கிறது, இன்னும் இன்னும்" என்று கூவினான் அச்சிறுவன். கடமை நிறைவேற்றின பெருமை கண்களில் தோன்ற, அவள் அவனுக்கு மேலும் மேலும் பரிமாறிக் கொண்டேயிருந்தாள்.

* * *

புகைபோலவும், மூடுபனி போலவும் தன் கண்களை மறைத்திருந்த திரை விலக அவள் தான் கண்ட அச்சிறுமியை உற்று நோக்கினாள். அவள் வேறு யாருமல்ல! தானே தான்! அச்சிறுவனும் அவளுக்கு ஊர்பேர் தெரியாத புதுமுகமல்ல! தன் ஆசைக்காதற் கணவன்தான் அச்சிறுவன்! அவள் இதழ்க் கடையில் ஒரு புன்னகை தெறித்தது. கல்லாகச் சமைந்திருந்த அவள் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள். இத்தனை நேரம் வேலையோடு காத்திருந்த பெருமையெல்லாம் அப் பெருமூச்சில் தொனித்தது. அவள் எண்ணமிடலானாள்.

"அன்று, அதாவது நான் ஒன்றுமறியாப் பேதைச் சிறுமியாக இருந்தபோது, விளையாட்டுக்காகத் தயாரித்த வேடிக்கை உணவை 'இன்னும், இன்னும்' என்று அவர் விநோதமாக உண்டாரே? இன்று, அவர் ஆசைக் காதலி தயாரித்த அன்பு உணவை அருந்த அவருக்கு ஒழிவு இல்லையோ? பின், ஏன் இன்னும் அவரைக் காணவில்லை? 'பசி, பசி' என்று அன்று பறந்தாரே? இன்று பசி என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டாரோ? அன்று 'கோடி புண்ணியமுண்டு' என்று இரந்து கேட்டு வாங்கிச் சாப்பிட்டாரே? இன்று நானே ஆர்வமொடு அளிக்கிறேன். இவரைக் காணவில்லையே?"

அலையேற்றிய இப்பி வைத்து
அடுப்பாக அரும்பு அவிழ்தேன்
உலையேற்றிய சங்கின் நித்திலம்
பெய்து அனல் ஒண்துகிரால்
கலையேற்றிய நுதல்நாம் அடும்
சோறிடக் கைக் கமலத்து
இலையேற்ற வெம்பசி
இன்றிலையோ நம் இறைவருக்கே

—அம்பிகாபதிக் கோவை

[இப்பி—சிப்பி, நித்திலம்—முத்து, ஒண்—ஒளிரும், துகிர்—பவளம், அடும்—சமைத்த, வெம்பசி—கொடிய பசி; இறைவர்—காதற் கணவர்]

மலபார் எக்ஸ்பிரஸ் ஸ்டேஷனை விட்டுப் புறப்படுவதற்கான முதல் மணியும் அடித்தாயிற்று. ரயிலும் ஒருமுறை ஊதி ஓய்ந்தது.

அவசர அவசரமாக ஸ்டேஷனுக்குள் நுழைந்த சங்கரன் ஒவ்வொரு பெட்டியாக யாரையோ தேடிக்கொண்டு வந்தான். அவன் தேடிய மனிதர்கள், சாவதானமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு, முகத்தில் மகிழ்ச்சி கொந்தளிக்க, மந்தகாசம் தவழ அமர்ந்திருந்தனர் இரண்டாம் வகுப்பில். சங்கரனைப் பார்த்தவுடன் அவர்கள் முகத்தில் குடிகொண்டிருந்த குதூகலம் செத்துவிட்டது.

மேலெழுந்த வாரியாக அதைக் கவனித்த சங்கரன், அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தை அணுகி, "சந்திரா பயப்படாதே, நீ என்ன தப்புச் செய்துவிட்டாய்? உன் மனதிற்குப் பிடித்தவனுடன் தானே புறப்பட்டு வந்திருக்கிறாய். அதற்காக நான் வருந்தவில்லை நீ கவலைப் படாதே!" என்று வண்டியில் அமர்ந்திருந்த சந்திராவிடம் இரண்டு பொட்டணங்களைக் கொடுத்தான்.

வண்டியும் நகர ஆரம்பித்து விட்டது. அதுவரை தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டிருந்த கோபால்—அவன் தான் சந்திராவின் காதலன்—சங்கரன் நின்றிருந்த பக்கம் திரும்பினான். சங்கரன் அவனிடம் "பத்திரமாகப் போ. அவளைக் கவனமாகப் பார்த்துக்கொள்" என்று ரயிலுடன் ஓடிக்கொண்டே வந்து கூறினான்.

கோபால் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவனுக்கு முகமேது சங்கரனைப் பார்க்க. வாயேது பதில் சொல்ல, மனமேது சங்கரனின் நிலையைப்பற்றிச் சிந்திக்க? அவன் செய்த குற்றம், ஏன் செய்துகொண்டிருக்கும் குற்றம் சாதாரணமானதல்ல!

சங்கரனைப் பார்த்தபோதே சந்திராவுக்குப் பாதி உயிர் போய்விட்டது. அவனை அவள் ஸ்டேஷனில் எதிர் பார்க்கவில்லையே! அவனுக்கு எப்படித்

தெரிந்தது, அவள் தன் காதலனுடன் ஓடும் தகவல்! சங்கரன், சந்திராவின் கணவன். அவனுக்குத் தெரியாமல் தன் கள்ளக் காதலனுடன் ஓடி வந்திருக்கும் சந்திராவுக்குச் சங்கரனைப் பார்த்தவுடன் உள்ளத்தில் மகிழ்ச்சி உதயமாகுமா என்ன? இடிந்து போய் உட்கார்ந் திருந்தாள் அவள். தன் கணவன் தான் செய்த குற்றத்திற்காகக் கவலைப்படவில்லையாமே! அந்த வார்த்தையை அவன் சொல்லும்போது அவள் மனம்தான் எப்படித் துடித்தது! தன் குற்றத்திற்காக, அவன் என்ன தண்டனை கொடுப்பானோ, என்னவோ என்றல்லவோ அவள் நினைத்தாள். அவன் ஸ்டேஷனுக்கு வந்து முகமலர்ச்சியோடு வழியனுப்பினான் என்றால் அது ஆச்சரியத்திற்குரிய விஷயந்தானே?

ரயில் ஸ்டேஷனை விட்டுப்புறப்பட்டவுடன் கோபால் சமாளித்துக்கொண்டான். அவன் உடம்பில்—மனதில் பழைய தெம்பு குடியேறிவிட்டது. இனி அவன் சங்கரனுக்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. சந்திரா அவன் சொத்து இப்போது.

குற்றம் செய்த திருடன், கையும் களவுமாகப் பிடிபடும் போதுதான் அவன் மனம் திடீரென அதிர்ச்சிக் குள்ளாகிறது. உடனே—ஏன்?—அந்த நிமிஷத்திலேயே அந்த ஆபத்து விலகி விட்டால், அவன் மனம் பழைய தெம்பை அடைவதில்லையா, அதுபோல. ஆனால் அடுத்து நடக்கும் விஷயத்தைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. நிகழ்கால மகிழ்ச்சியே அவன் மனதில் நிலைத்திருந்தது.

கோபால் சந்திராவைப் பார்த்தான். அவள் மன நிம்மதியற்று உட்கார்ந்திருந்தாள். "இப்படிப்பட்ட ஒரு கணவனுக்குத் துரோகம் செய்வதா?" என்ற எண்ணம்தான் அவள் மனதில் ஈட்டியைப்போல் குத்திக்குத்தி வலி காணச் செய்தது!

"என்ன சந்திரா? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" ஒன்றுமே தெரியாதவன் பேசுவது போலிருந்தது அவன் கேள்வி.

"ஒன்றுமில்லை" என்ற பதில்தான் அவளிடமிருந்து வந்தது. உண்மையில் கோபாலுக்கும், சந்திராவுக்கும், சங்கரனை எதிர்பாராத விதத்தில் ஸ்டேஷனில் சந்தித்தது, ஒரு பெரிய பூகம்ப அதிர்ச்சியையே அவர்கள் உள்ளத்தில் உண்டாக்கி விட்டது. அதை அவர்கள் மறைத்தாலும் அவர்கள் உள்ளம் மறைக்க முடியாதே!

சங்கரன் கிளப்பி விட்டுப் போன அந்தப் புயல் எளிதில் அடங்குவதாகக் காணோம். புயலின் சுழற்சியில், சந்திரா தன் நிலைமையைத் தெளிவாகக் கண்டாள்; வெறும் வெட்ட வெளிதான் தெரிந்தது; வேறென்ன தெரியும்!

புயலின் வேகத்தில் தெருவில் கிடக்கும் தூசியெல்லாம் இடம் மாறுவது போல, அவள் உள்ளத்தில் படிந்திருந்த பழைய பாசி, இடம் பெயர்ந்தது.

2

சந்திராவும் கோபாலும் அண்டை வீட்டுக்காரர்கள். நெருங்கிப் பழக எவ்வளவோ சந்தர்ப்பங்கள்.

சந்திராவுக்குக் கோபால் மேல் அளவு கடந்த அன்பு. கோபாலுக்குச் சந்திரா என்றால் உயிர் என்று அவனாகச் சொல்லிக் கொண்டான்.

இப்பொழுதெல்லாம் காதலை யார் கவனிக்கிறார்கள்? அப்படி ஏதாவது 'காதல்' கல்யாணம் நடந்துவிட்டால், அது ஆச்சரியப்படக்கூடிய செய்தியே!

எனவே சந்திராவுக்கும் அவள் காதலிக்காத சங்கரனுக்கும் திருமணம் முடிவு செய்யப்பட்டது.

"சந்திரா இல்லாவிட்டால், தன் வாழ்வே இல்லை, அப்படி, இப்படியென்று அவளிடம் கதறிய கோபால், ஏன் தன் திருமணம் நிச்சயமானவுடன், தன்னை வந்து பார்க்கவில்லை, தனக்கு ஆறுதல் சொல்லவில்லை," என்று நினைத்தாள் சந்திரா! காதலில் பரிபூரண நம்பிக்கையுள்ளவள் அவள்.

அவன் வீட்டில் விசாரித்தபோது, அவனுக்கு வெளியூரில் வேலைகிடைத்து விட்டதாகவும், அவன்வேலை ஏற்க அங்கு போய் விட்டதாகவும் தெரிந்தது. "காதல் என்றால் அவ்வளவு தான்" என்று அவளுக்கு அப்போதும் தெரியவில்லை பாவம்! சந்தர்ப்பக் கோளாறு என்று தான் அவள் நினைத்தாள்.

சங்கரன் கண்ணுக்கழகானவன். நல்ல உத்தியோகம். பெரிய இடத்துப் பையன். அவனைக் கணவனாக ஏற்றும் கூட வாழ்க்கையில் இன்பம் காணமுடியாமல் தவித்தாள், சந்திரா. கணவன் மேல் தனக்குக் 'காதல்' ஏற்படவில்லையே என்று கவலைப்பட்டாள் அவள். கடமைக்காக மட்டுமே அவன் மனைவியாக இருந்தாள்.

புதிதாகத் திருமணமான பெண்கள் எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள், என்று மனதைச் சமாதானம் செய்துகொண்டான் சங்கரன்.

அளவுகடந்த அன்போடு அவளிடம் பேசினாலும், அணுகினாலும் அவள் ஏன் சலிப்பாக நடந்து கொள்கிறாள் என்று



தெரிந்து கொள்ளச் சங்கரனல் முடியவில்லை. ஒருவேளை அவளுக்குத் தேவைப்பட்ட சாமான்களும், புடவைகளும் வாங்கித்தர வேண்டுமோ, என்னவோ என்று அவள் கேட்காத போதே வேண்டியவற்றையும், வேண்டாதவற்றையும் வாங்கிக் குவித்தான்.

அப்போதும் அவளிடமிருந்து அவன் எதிர்பார்த்த அன்பு கிடைக்கவில்லை.

அவன் பேசினல், அவள் பேசினள். அவன் சிரித்தால், அவள் சிரித்தாள். அவளுடைய இந்தப் போக்கு சங்கரனுக்குச் சலிப்பை உண்டாக்கிவிட்டது, ஏதோ சொல்வார்களே "கல்யாணம் கட்டியும் பிரம்மச்சாரி!" என்று—அதைப்போல் தான் இருந்தது அவன் நிலை.

அவனுடைய ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ப் பக்கத்து ஆதரவு இருந்தாலல்லவோ இல்வாழ்க்கை வெற்றி பெறும்! 'காதல்' நிறைவேருததால் தனக்கு இனி வாழ்வே இல்லை என்று தான் சந்திரா நினைத்தாள். அவளுடைய காதல் தெய்வம், கோபால், அவள் இருந்த திக்கைத் திருப்பிக் கூடப் பார்க்கவில்லை.

நிலைமையில் எந்த விதமான மாறுதலும் ஏற்படாமல் போகவே சங்கரன் சந்திராவை அவள் தாயார் வீட்டுக்கு அனுப்பிவிட்டான், அப்போதாவது ஏதாவது மாறுதல் ஏற்படுமென்ற நம்பிக்கையுடன்!

அவள் தாய் வீட்டுக்குப் போகும் சமயத்தில் தானு கோபாலும் லீவில் வரவேண்டும், சொந்த ஊருக்கு!

ஒரு நாள் கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள் சந்திரா!

"என்ன சந்திரா, சௌக்கியமா?" என்ற குரல் கேட்டுத் திரும்பினள்.

கோபால் நின்று கொண்டிருந்தது அந்த மங்கிய வெளிச்சத்திலும் நன்ருகத் தெரிந்தது.

"சௌக்கியத்திற்கு என்ன குறைச்சல்... நீங்கள்....!"

"நான் நன்ருக இருக்கிறேன்.... இருந்தாலும் நீ இல்லாத கவலைதான்....எனக்கு மனச் சாந்தி அளிக்க மாட்டேன் என்கிறது!"

சந்திராவின் மனம் மகிழ்ச்சியினல் துள்ளியது. தனக்குத் திருமணம் ஆகியும் கூடத் தன் மீது மாருத அன்பு வைத்திருக்கிருனே கோபால் என்று அவள் எண்ணி மகிழ்ந்தது நடக்கக் கூடாத விஷயமல்ல.

இருவரும் கோவிலின் பின்புறம் நோக்கிப் போனுர்கள் தனித்துப் பேசுவதற்காக—

சந்திரா தன் நிலைமையைக் கோபாலுக்குப் படம் பிடித்துக் காட்டினள்.

கோபால் நிலைமையை ஒருவாறு தெரிந்துகொண்டான்.

"நான் இன்னும் உன்னை நேசிக்க முடியும் என்று நினைக்கிருயா சந்திரா?" இது கோபால்.

"ஏன் முடியாது? நான் தான் உன்னை என் உயிரினும் மேலாக நினைத்திருக்கிறேனே!"

"ஏன் நீ உன் கணவனுடன் வாழ்க்கை நடத்தக் கூடாது!"

"எனக்கு மனமே இல்லை. வாழ்க்கைப்பட்டு விட்டோமே என்று, நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறேன்!"

"நான் புறப்பட்டு வரச்சொன்

ஞல், வந்து விடுவாயா என்னு டன்?''

"ஆகா! இப்போதே, நாம் எங்காவது புறப்பட்டுப் போய், தனியாக, இன்பமாக, எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படா மல் வாழ்க்கை நடத்துவோம். வாருங்கள்!''

"பணம்?''

"என்மீது தான் ஏராளமான நகைகள் இருக்கின்றனவே''

"நீ மாறமாட்டாயே!''

"நீங்கள் சம்மதித்தால் மாற்ற முடியாது!''

"சரி. நீ உன் கணவன் வீட்டுக்குப் போய் இரு. நான் வந்து உன்னே அழைத்துக் கொண்டு போகிறேன்!''

'சரி!''

அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். உண்மைக் காதலர்கள் ஒருமித்து ஊரைவிட்டு ஓட நிச்சயித்து விட்டார்கள்.

சங்கரனுக்கு இது தெரியாது. ஊரிலிருந்து வந்த தன் மனேவி, தன்னிடம் இவ்வளவு சுமுகமாக நடந்து கொள்வதன் காரணம் என்ன வென்று தெரியாமல் திகைத்தான். அன்று முதல் அவளது நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கவனிக்க ஆரம்பித்தான். அவளைப் பற்றி நன்ருகத் தெரிந்துகொண்டான். கோபால், சந்திரா உறவு அவனுக்கு விளங்க ஆரம்பித்த போதுதான் அவன் மனம் கடந்த நாட்களின் நடப்பை மீண்டும் மனதில் கொண்டு வந்து நிறுத்தி ஆராய்ந்தது. அப்போது குதூகலமில்லாமல் இருந்த சந்திரா, இப்போது குதூகலமாயிருப்பதற்குக் காரணம் என்ன வென்று பார்த்தான. அவள் எந்த விஷயத்திலாவது வெற்றி கண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

ஒரு நாள் அவன் காரியாலயத்திலிருந்து வரும்போது, தன் வீட்டிலிருந்து கோபால் வெளியேறுவதைக் கவனித்து விட்டான். அந்தத் தினத்தில் தான் சந்திரா அவனே எவ்வளவு அன்போடு உபசரித்தாள்!

சங்கரன் நினைத்தான். கள்ளமில்லா உள்ளத்தோடு கணவன் என்ற வார்த்தைக்கு அளவுக்கு மீறிய மதிப்புக் கொடுத்து வாழ்க்கை நடத்துபவளோடு தான், தான் வாழ வேண்டுமே ஒழிய, சந்திராவுடன் வாழ்க்கை நடத்துவது சாத்தியமல்ல என்பதை அவன் மனம் நன்கு புரிந்து கொண்டது.

சந்திராவும் கோபாலும் வெளியூர் சென்று வாழ்க்கை நடத்தப் போகும் திட்டமும், அவன் ஊகித்தறிந்தது தான். அவள் போனல் போகட்டும் என்று இருந்துவிட்டான் சங்கரன்......!

அவன் மனம்—அநியாயமாக ஒரு பெண் கெட்டுப் போவதில் திருப்தி கொள்ள வில்லே.

கோபாலும். சந்திராவும் புறப்பட்டுப் போகவேண்டியநேரத்தில் தான், சங்கரனும் வெளியில் போய் விட்டான். சந்திராவுக்கு இது எதிர்பாராத சந்தர்ப்பம். அவன் வீட்டில் இருப்பான், வெளியேறுவது கடினம் என்றெல்லாம் நினைத்தாள் அவள்!

அவன் வெளியேறியதும், கோபாலும் சந்திராவும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு விட்டனர்! அவர்கள் எதிர்பாராத

நேரத்தில் தான் சங்கரன் அவர் களை அங்கு சந்தித்து விட்டான்.

3

"இது என்ன பொட்டணங் கள்!" என்று அவளை நினை வுலகத்திற்கிழுத்தான் கோபால்.

"சந்திராவுக்கு" "கோபா லுக்கு" என்று இரண்டு பொட் டணங்களின் மேலும் தனித் தனியாக எழுதப்பட்டிருந்தது.

சந்திரா, தன் பெயர் எழுதி யிருந்த பொட்டணத்தைப் பிரித் தாள். அதில் இருந்தவை, பட் டுப் புடவை ஒன்று, ரவிக்கைத் துணி ஒன்று, கடிதம் ஒன்று.

கடிதத்தைப் படித்தாள்.

"சந்திரா!

புதுவாழ்வை நடத்தப் போகி ருய். போய்வா! என்னை நீ கைவிட்டு ஓடியதுபோல் அவன் உன்னைக் கைவிட்டு விட்டால் திரும்பவும் என்னிடம் வா! நான் உன்னை மீண்டும் ஏற்றுக் கொள்ளுகிறேன் மனைவியாக. அவனுடனேயே இருந்து, வாழ்க்கை நடத்தினல் நடத்து! உனக்கும் உன் எதிர்காலக் கண வனுக்கும் எனது வாழ்த்துக்கள்!

சங்கரன்"

அவளை உயிரோடு சித்திரவதை செய்தால் அவள் தாங்கிக்கொள் ளும் நிலமையில் அப்போது இருந்தாள்! ஆனல், அக்கடிதத் தினல் ஏற்பட்ட அதிர்ச்சியை அவளால் தாங்க முடியவில்லை.

வண்டி டேனிஷ் பேட்டையில் நின்றது. தன் பொட்டணத் தைப் பிரித்து அதிலிருந்த வேட்டியையும் மேல் சொக்கா யையும் பார்த்துவிட்டுத் தன் கடி தத்தைப் படித்துக் கொண் டிருந்த கோபால், வண்டி நின்ற தும் கீழே இறங்கினன்.

ஏதாவது வாங்கிவருவான் என்ற நம்பிக்கையில், சந்திரா அவன் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த கடிதத்தை எடுத் தாள்.

"கோபால்—

நீ அவளைக் கடத்திக்கொண்டு போகிருய். உனக்கும் திருமண மாகி, உன் மனைவி தன்னுடைய பழைய காதலனுடன் ஓடிவிட் டால், நீ என்ன நிலையில் இருப் பாயோ அந்த நிலையில்தான், நான் இருக்கிறேன். நீ அவளைக் கடைசி வரை காப்பாற்றுவா யென்பது என்ன நிச்சயம்? அவளைக் கை விடாமல் பார்த்துக் கொள்ளுவ தாய் இருந்தால் மட்டும், நீ அவ ளைக் கொண்டுபோ. இல்லாவிட் டால் அவளை என்னிடம் ஒப் படைத்து விடு! ஆண்மையும் மனிதத் தன்மையும் உனக்கும் இருக்கும் என்று நம்புகிறேன்.

சங்கரன்"

கடிதம் முடிந்தது, வண்டி நகர்ந்தது. கோபால் வண்டியில் ஏறவில்லை. ஏன் திரும்பி வரு கிறுன் அவன்!

ரயில் போன வேகத்தில் கடி தங்கள் காற்றில் பறந்தன. வண்டி அடுத்த ஸ்டேஷனில் நின் றது. எதிரேவந்து கொண் டிருந்த ரயிலும் அங்குதான் நின் றது. சந்திரா தன் ரயிலைவிட் டிறங்கி அதில் ஏறி உட்கார்ந் தாள். பிறகு அவள் கோபாலைப் பார்க்கவே யில்லை.

இருளும் ஒளியும்

ஒரு நாய். நாட்டுப்புறத்தைச் சேர்ந்தது. அது நகரத்தைப் பார்க்க வேண்டும் என்று அங்கே வந்து சேர்ந்தது. அங்கு அது கண்டது ஒரே இரைச்சல் தான். மக்கள் குறுக்கும் நெடுக்கு மாக ஓடிக்கொண் டிருந்தனர்.

எங்கு பார்ப்பினும் குழப்ப மும் கூச்சலும்தான்.

நடந்து வந்த அசதி. நாய்க்குக் களைப்பு மேலிடவே சற்றுக் கண் ணயரலாம் என நினைத்தது. ஆனால் அதற்கு ஒரு சந்தேகம். 'இந்தக் குழப்பத்திலும் கூச்சலி லும் நான் உறங்கிவிட்டால் மறு படியும் கண்விழிக்கும் போது என்னை நான் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?'

சிறிது நேர சிந்தனைக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தது. தன்னைத் தான் தெரிந்து கொள்வதற்கா கத் தன் கால் பக்கத்தில் ஒரு கல்லை வைத்துக்கொண்டு படுத் தது. இதனுடைய சந்தேகத்தை யும், பைத்தியக்காரச் செயலை யும் கண்ட உள்ளூர் நாய் ஒன்று தனக்குள் சிரித்துக் கொண்டது.

வந்த நாயும் கண்ணை மூடியது. அந்த உள்ளூர்ப் போக்கிரி நாய் அதன் காலருகில் இருந்த கல்லைத் தன் பக்கமாக நகர்த்திக் கொண்டது.

சற்று நேரங் கழித்து, வந்த நாய் கண்ணை விழித்துப் பார்த் தது. ஒரே குழப்பம் அதற்கு. அடையாளத்திற்காகத் தன் அருகில் வைத்திருந்த கல் பக்கத் தில் படுத்திருக்கும் நாயின் அரு கில் இருக்கக் கண்டதும் ஒன் றுமே புரியவில்லை அதற்கு.

வந்தது கோபம் நாட்டுப் புறத்து நாய்க்கு "என்னைக் குழப்பத்திற்கு ஆளாக்கின ஒன்றுக்கும் உதவாத மடையா! உன்னால் என் நிலையே மாறிவிட் டதே! நான் நானானால் கல் உன்னிடம் ஏன் இருக்கிறது? நான் நீயானால் நான் எங்கே? பிறகு நான்தான் யார்?" இப் படி வசைப் பாடித் தீர்த்தது.

இந்த முட்டாள் நாயின் கேள்விக்குத் தான் வேத வேதாந்திகள் இன்னும் விடை கண்டு பிடித்துக்கொண் டிருக் கிறார்கள்!

பொதுவாக, இன்றைய சமுதா யத்திலே கவைக்குதவாத வாதங் கள் பேசிக் காலத்தையும் கருத் தையும் செலவிடுவோர் நாட்டுப் புறத்து நாயின் நிலையிலும், சின் னஞ் சிறு கதை பேசி மக்களை ஏமாற்றுகின்றவர்களைக் கண் டித்து அறிவுலகம் காண ஆசைப்படும் இலட்சியவாதிகள் நாட்டுப்புறத்து நாயின் தாக்கு தலுக்காளாகும் நகர்ப் புறத்து நாயின் நிலையிலும் இருக்கின்ற னர், இருளும் ஒளியும் போல.

—நாவரசன்

வளரும் இலக்கியம்

இன்பக்கடல்

சத்திமுத்தப் புலவர்

கவியரசர் பாரதிதாசனார் தமிழ் மக்களுக்கு வழங்கி யிருக்கும் இரண்டு நாடகங்கள் இவை. நாடகங்களின் சிறப்பு பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் கவியரசரைத் தமிழ் நாடு நன்கறியும், கவியரசர் நூல்களின் பெரு மதிப்பையும் தமிழ் மக்கள் நன்கறிவர். இந் நாடகங்கள் உவமை நயம், ஓசை நயம் ஒருங்கே அமையப் பெற்றன; படிக்கப் படிக்க இனிப்பன; கவியரசர் தனக்கென்று உரித்தான கற்கண்டுத் தமிழிலே சுவைபடச் சுவைபட எழுதியுள்ளார். விலை ரூ. 1-0-0; கிடைக்குமிடம், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

கன்னியின் சபதம்

கண்பர் ப. கண்ணனின் சுவை மிக்க தமிழ் நாடகம் இது. தமிழ் நாட்டுப் பெண்கள் வீரத்தில் இளைத்தவரல்ல; இது சரித்திரம் கண்ட உண்மை. நீதிக்காகப் பழி வாங்கிய கண்ணகியின் வரிசையிலே மஞ்சினியையும் ஒப்பு நோக்கலாம். ஆசிரியர் நாடகத்தை விரித்துச் செல்லும் முறை நன்றாக இருக்கிறது. விலை 0-8-0 வெளியிட்டோர், தென்றல் நூற் பதிப்புக் கழகம் ஜலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

ஆசிரியர் வேலாயுதம்

(வாழ்க்கை வரலாறு)

'உடையார் பாளையம் கொலை வழக்கு' தமிழ் நாட்டைப் பரபரப்புக் குள்ளாக்கியது அனைவருக்கும் தெரிந்ததாகும். வேலாயுதம் ஒரு சாதாரணத் தமிழாசிரியர்: பழங்குடி வகுப்பில் தோன்றியவர்; இனத்துக்காக எண்ணரிய தொண்டுகள் பல செய்தார்; அவைகளே அவரைப் பயங்கரமான முடிவுக்கு ஈர்த்தன. அந்த வீரனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக-ஆனால் தெளிவாக எழுதியுள்ளார் புலவர் சந்திரகாசன். விலை அணா 10. கிடைக்குமிடம் வழிகாட்டி வெளியீட்டகம், தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

மாமாவின் சாகசம்

நிறையச் சம்பவங்களைக் கோர்த்துப் பின்னப் பட்ட ஒரு துப்பறியும் நாவல் இது. ஆசிரியர் உற்பத்தி செய்யும் புதிய புதிய மர்மங்களை விரட்டிக் கொண்டு செல்லும் ஒரு அசட்டு மாமா-அந்த மர்மங்களுக்குக் கிடையே அலைக்கழிக்கப் படும் ஒரு அப்பாவி-பிறகு சந்தேகம் கொள்ளை, கொலை-இடையிலே காதல், காமம்-இப்படியாகக் காற்றடித்த பாம்புப் பலூன் மாதிரி நீண்டு கொண்டே செல்லும் கதைப் போக்கு-இவைதான் மாமாவின் சாகஸம்; சும்மா

பொழுது போக்குக்காக வேண்டு மானல் ஒரு முறை புரட்டிப் பார்க்கலாம். எழுதியவர் விஜயன்; விலை 0-12-0 கிடைக்கு மிடம் சக்தி காரியாலயம், ராயப் பேட்டை சென்னை-14.

ஊருக்கு உழைத்தவர்கள்

கவிஞன் கிரே, அறிஞர் டால்ஸ் டாய், தாந்தே, கவிகீட்ஸ் ஆகிய நால்வரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதியுள்ளார். நல்ல முயற்சி; வரவேற்கத் தகுந்தது. ஊருக்கு உழைத் தவர்கள் என்பதை விட வேறு நல்ல தலைப்புக் கொடுத்திருக்கலாம்; முகப்பில் ஆசிரியர் எடுத்துக் கொண்ட அறிஞர்களின் படம் ஒன்றைப் போட்டிருக்க வேண்டும். எழுதியவர் மா. தங்கவேலர். வெளியிட்டோர் ஆராய்ச்சி நிலையம், சென்னை 5.

அவர்கள் சந்திப்பு

இந்தி நல்லெண்ணத் தூதுக் குழுவினர் தென்னாடு வந்திருந்த போது அறிஞர் அண்ணாதுரை அவர்களைக் காஞ்சிபுரம் திராவிட நாடு அலுவலகத்தில் கண்டு பேசினர். தூதுக் குழுவினருக்கும் அண்ணாவுக்கும் நடந்த உரையாடலில் கொள்கை தெளிவாக்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மாற்றுக் கட்சியினருக்கு அவ்வுரையாடல் நல்லதொரு விளக்கவுரை! உரையாடலைக் குறிப்பெடுத்துப் புத்தகமாக்கிய பெருமை தோழர் இராம அரங்கண்ணலைச் சாரும். வெளியிட்டோர் திராவிடப் பண்ணை, திருச்சிராப்பள்ளி. விலை அணா 3.

களத்திலே காளைகள்

வட நாட்டுச் சுரண்டலை எதிர்த்து 18-10-50 அன்று திராவிடக் கழகத்தினர் கிஷின் சந்த்-செல்லாராம் என்ற வடநாட்டுத் துணிக் கடை முன்பும், ஆரியபவான் என்னும் உணவு விடுதியின் முன்பும் அமைதியான முறையிலே 'அறப்போர்' துவங்கினர். அவ்வறப் போரின் முக்கியத்தையும் அவசியத்தையும் திருவாரூர். கே. தங்கராஜு இப்புத்தகத்தில் தெளிவாக்குகிறார். விலை அணா 5. வெளியிட்டோர் புதுமைப் பண்ணை, திருச்சிராப்பள்ளி.

ஒரே வழி ஒன்றுபடுவது

தமிழ் நாடு தனியாகப் பிரிந்து தனியாட்சி செலுத்த வேண்டுமென்பது இந் நூலாசிரியரின் குறிக்கோள். அதற்கான விளக்கங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லுகின்றார். கடைசியில் இந்தப் பாழாய்ப் போன நாட்டிலே எல்லோராலும் பகைக்கப் பட்டுவரும் 'ஒரே வழி'யைக் காட்டி விட்டுப்போகிறார். எழுதியவர் சி. அரசப்பன். விலை அணா 5. கிடைக்குமிடம் புலவர் சி. அரசப்பன், சாத்தனூர் P. O. திருக்காட்டுப்பள்ளி.

தமிழர் திருநாள்

பொங்கல் விழாவைப் பற்றித் தோழர் தி. ரா. தருமாரசன் 'தமிழ்மணி'ப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையைப் புத்தக வடிவாக்கியுள்ளார்கள். பொங்கல் விழாவின் சிறப்பு இக்கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது. விலை அணா 2. வெளியிட்டோர் 3, ஜாலி சிதம்பர முதலி தெரு, பெங்களூர்.

கடவுள் எங்கே?

ஆராய்ச்சிக் கட்டுரையல்ல; சிறு கதை தான்! கீழ்ச் சாதிப் பெண்ணொருத்தி, தன் குழந்தையோடு கோவிலுக்குள் நுழைந்து விடுகிறாள்; இதைப் பொறுத மேல் சாதியார் அவளை அங்கிருந்து விரட்டி விடுகின்றனர். கடைசியில் "கடவுள் எங்கே?" என்ற இழவு கீதத்துடன் கதை முடிகிறது. எழுதியவர் மதிவாணன். வெளியிட்டோர் செல்வ நிலையம், 110, A. P. ரோட், சென்னை 7. விலை அணா 3.

சினிமா நடிகை

குடும்பப் பெண் ஒருத்தி சினிமாவில் நடிக்க ஆரம்பித்துத் தன் கணவனையே காதலனாக அடையும் கதை இது; புதிய கற்பனையோ, புதிய கருத்துக்களோ கிடையாது. புத்தகம் வெளியிட வேண்டுமென்ற ஆசிரியரின் ஒரே ஆசை 'சினிமா நடிகை'யால் பூர்த்தி செய்யப் பட்டிருக்கிறது. எழுதியவரும் வெளியிட்டவரும்: S. K. T. சௌந்திரபாண்டியன், பத்திரிகை நிருபர், கோவில் பட்டி.

கோவில் பட்டிக் கொலை வழக்கு

நிஜ வழக்கல்ல; கற்பனைதான். W. D. துரைசாமியின் முதல் முயற்சி என்று கருதுகிறோம். விலை அணா 4. விற்பனை உரிமை எஸ். ராமையா, திராவிடச் செய்தி மன்றம், மெயின் ரோடு, கோவில்பட்டி.

இன்ப வாழ்வு

கவி. டாக்டர் எஸ். எ. சஞ்சீவி அவர்கள் எழுதி (ப்பழகி) யிருக்கும் சிறிய நாவல் இது. விலை அணா 4. கிடைக்குமிடம் சஞ்சீவி கார்ப்பரேஷன், பிரசுர இலாகா, சேலம்.

அஞ்சலி (மாதப் பத்திரிகை)

நிஜப் போட்டோக்களுடன் கதைகளை வெளியிடும் பத்திரிகைகள் தமிழ் நாட்டில் நிறைய வந்து விட்டன. அந்த எண்ணிக்கையை அதிகப் படுத்துகிறது அஞ்சலி. திருமதி அஞ்சலி தேவியின் திரு உருவத்தை முகப்பில் தாங்கிய வண்ணம் முதல் இதழ் வெளிவந்திருக்கிறது. சினிமாச் செய்திகளோடு சிறு கதைகளும் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஆசிரியர் P. சுந்தரம். விலை அணா 8. கிடைக்குமிடம்: மானேஜர் "அஞ்சலி" 19, கப்பல் போலு செட்டி தெரு, சென்னை 21

அறப்போர் (மாத வெளியீடு)

சிறந்த சீர்திருத்தக் கட்டுரைகளுடன் கோதையூரிலிருந்து வெளிவருகிறது. திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளைப் பரப்பும் குறிக்கோளில் இத்திங்கள் ஏடு துவக்கப் பட்டிருக்கிறது. விலை அணா 4. கிடைக்குமிடம்: அறப்போர் அலுவலகம், கோதையூர், நாகர்கோயில் P.O.

திங்கள் (மாத வெளியீடு)

திரு கே. சின்னையா M.A.B.L. அவர்களை ஆசிரியராகக் கொண்டு திங்கள் ஒரு முறையாகத் 'திங்கள்' வெளி வருகிறது. கதை, கவிதை, கட்டுரை, அரசியல், சினிமா, முதலிய பகுதிகளால் பத்திரிகையின் பக்கங்கள் நிரப்பப் பட்டுள்ளன. விலை அணா 4 திங்கள் நிலையம்- அமிஞ்சிக்கரை சென்னை, 10.

—அரசன்.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD. at PONNI ACHAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.

197792

கவியரசர் பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள் ...	முதற்பாகம் ...	3	8	0
பாண்டியன் பரிசு ...	காவியம் ...	3	8	0
தமிழச்சியின் கத்தி ...	,, ...	1	0	0
காதலா? கடமையா? ...	,, ...	1	4	0
எதிர்பாராத முத்தம் ...	,, ...	1	4	0
கடல்மேற் குமிழிகள் ...	,, ...	0	12	0
தமிழியக்கம் ...	கவிதைகள் ...	1	0	0
அழகின் சிரிப்பு ...	,, ...	1	0	0
காதல் நினைவுகள் ...	,, ...	0	12	0
குடும்ப விளக்கு I ...	முதற்பாகம் ...	0	6	0
,, II ...	விருந்தோம்பல் ...	0	10	0
,, III ...	திருமணம் ...	0	10	0
,, V ...	முதியோர் காதல் ...	0	6	0
சேரதாண்டவம் ...	உரை நடை ...	1	4	0
நல்ல தீர்ப்பு ...	,, ...	0	10	0
கற்கண்டு ...	,, ...	1	0	0
இன்பக் கடல் ...	சிறு நாடகங்கள் ...	1	0	0
இசையமுது ...	எளிய நடைப்பாடல்	0	10	0
ஏற்றப்பாட்டு ...	,, ...	0	4	0
பாரதிதாசன் ஆத்திச்சூடி (உரையுடன்) ...	,, ...	0	4	0
தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு	...	0	4	0
அமிழ்து எது? ...	வானொலிக் கவிதை	0	3	0

வணிகர்க்குத் தக்க கழிவு உண்டு

விவரங்கட்கு :

“பொன்னி” (புத்தகப் பிரிவு)

தண்டையார்ப்பேட்டை—சென்னை 21

Wrapper printed at Shanti Press, Madras-1